பக்கங்கள்: 14

# காலைக்கதிர்

Kalaikkathir

விடியல் 08 வள்ளுவர் ஆண்டு 2055 ஆனி 10 திங்கட்கிழமை 24.06.2024 கதிர் 229

## தேர்தலை நடத்தாதிருப்பதே ஜனாதிபதியின் நிலைப்பாடு

### விளக்குகிறார் சிறிதுங்க ஜயசூரிய

ஜனாதிபதி ரணிலின் உண்மையான நிலைப்பாடு தேர்தலை நடத்தாது இருப்பதேயாகும் என்று ஐக்கிய சோசலிசக் கட்சியின் பொதுச் செயலாளர் சிறிதுங்க ஜயசூரிய தெரிவித்தார்.

மட்டக்களப்பு ஊடக அமையத்தில் நேற்று செய்தியாளர்களைச் சந்தித்தபோது அவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

ரணில் தேர்தலில் போட்டியிடப்போகின்றார் என்று கூறவில்லை. ஆனால் தேர்தல் வேலைகளை ஆரம்பித்துள்ளார். இப்போது மட்டக்களப்பில் உள்ளார். அவர் வாக்குகளை சேகரிக்கும் செயற்பாட்டில் பங்கேற்றுள்ளார்.

அரசின் நிதியைப் பயன்படுத்தி அரச உழியர்கள், பொலிஸார், இராணுவத்தினர் உள்ளிட்டவர்களைப் பயன்படுத்தி வாக்குகளை சேகரிக்கத் தொடங்கியுள்ளார்.

இது இந்த ☞ 8

## நிலக்கடலை பதனிடும் தொழிற்சாலையை மட்டக்களப்பில் திறந்து வைத்தார் ஜனாதிபதி

விவசாய அமைச்சினால் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ள விவசாய நவீனமயமாக்கல் வேலைத்திட்டத்தின் கீழ் 55 மில்லியன் ரூபா செலவில் மட்டக்களப்பு - கரடியனாறு பிரதேசத்தில் நிர்மாணிக்கப்பட்டிருக்கும் நிலக்கடலை பதப்படுத்தும் நிலையத்தை நேற்றுக் காலை திறந்து வைத்து உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:

இது விவசாய நவீனமயமாக்கல் திட்டத்தின் ஒரு அங்கமாகும். நாட்டில் விளைச்சல் செய்யாத காணிகளே அதிகளவில் உள்ளன. இந்த நிலங்கள் அனைத்தும் விளைச்சலுக்கு பயன்படுத்தப்பட வேண்டும். அதனூடாக ஏற்றுமதி விவசாயத்தைக் கட்டமைக்கவேண்டும். இந்த நாட்டின் உணவுத் தேவைக்காக மட்டுமன்றி, மற்றைய நாடுகளின் உணவுத் தேவைக்காகவும் விவசாயப் உற்பத்திகளை ஏற்றுமதி செய்யத் தயாராக இருக்க வேண்டும்.

அதன்மூலம் அதிகளவில் வெளிநாட்டு வருமானத்தை ஈட்டமுடியும். வெளிநாடுகளில் இருந்து கடன்பெறவேண்டிய தேவையும் இருக்காது. நாட்டின் பொருளாதாரத்தை மீண்டும் கட்டியெழுப்பவே இந்த நாட்டை நான் பொறுப்பேற்றேன். புதிய பொருளாதாரம் உருவாகும்போது, நாட்டின் விவசாயிகளுக்கும் நல்லவருமானம் கிடைக்கும்.

இத்தொழிற்சாலை திறந்து வைக்கப்பட்டதுடன் விவசாய நிறுவனங்களுக்கு நவீன தொழில்நுட்பத்துடன் விவசாய பணிகளை முன்னெடுக்க ☞ 9

## இது ரகசியம் அல்ல!

இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையில் இப்போது புதிய போட்டி ஒன்று கிளம்பியுள்ளது. ரணில் ஆட்சி நாட்டைக் கூறுபோட்டு இந்தியாவிற்கும் சீனாவிற்கும் அமெரிக்காவிற்குமாக விற்று வந்தபோதும், இந்தப் போட்டி நிலத்தைக் கடந்து ஆழ்கடலில் தோன்றியுள்ளது.

இந்தியப்பெருங்கடலின் நடுவில் நீருக்கடியில் உள்ளமலையின் கமன வளங்களைப் பெறுவதற்குத்தான் இந்தப் போட்டி. 'கோபால்ட்' என்ற கனிம வளம் நிறைந்த அந்த மலையை ஆராய்வதற்கான உரிமைகளைப் பெறுவதற்கு இந்தியா துடிக்கிறது. விலைமதிப்பற்ற கனிமங்களைக் கொண்ட அப்பகுதியைத் தோண்டிப்பார்த்துவிட இலங்கையும் விரும்புகின்றது.

அல்ஜசீரா அரபு செய்தி நிறுவனம் இந்தத் தகவலை வெளியிட்டுள்ளது. இந்தியா ஏற்கனவே கோபால்ட் விநோயகச் சங்கிலியில் ஆதிக்கம் செலுத்தி வருகின்றது. இருந்தாலும் கடலுக்கடியில் இருக்கும் இந்த மலையையும் கைப்பற்றுவதற்கு அது அவசரப்படுகின்றது. இந்தியப் பெருங்கடலில் சீனாவின் கைகள் நீள்வதைக்கண்டு இந்தியா பதற்றமும் அச்சமும் அடைந்திருப்பதே அதற்குக் காரணம் என்று அதிகாரிகள் ☞ 2

# காஸா மோதல் குறித்த இலங்கை நிலைப்பாடு ஒருபோதும் மாறாது

### காத்தான்குடி பள்ளிவாசலில் நின்று ரணில் அறிவிப்பு

**காஸா பகுதியில் இடம்பெற்று வரும் மோதல்கள் தொடர்பில் இலங்கையின் நிலைப்பாடு ஒருபோதும் மாறாது எனவும், 5 வருடங்களுக்குள் பாலஸ்தீன அரசை ஸ்தாபிக்க வேண்டும் என்பதே இலங்கையின் நிலைப்பாடாகும் என ஜனாதிபதி ரணில் விகிரமசிங்க தெரிவித்தார்.**

**காஸாவில் பாதிக்கப்பட்ட மக்களுக்காக காத்தான்குடி பெரிய ஜும்மா பள்ளிவாசலில் நேற்று ஏற்பாடு செய்யப்பட்டிருந்த விசேட பிரார்த்தனையில் கலந்து** ☞ 2

## ஜூன் 26 ஜனாதிபதி ரணில் நாட்டு மக்களுக்கு உரை

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க சுயாதீன வேட்பாளராக போட்டியிடுவார் என்று தெரிவித்துள்ள ஐக்கிய தேசியக் கட்சியின் தேசிய செயலாளரான ரவி கருணாநாயக்க எதிர்வரும் புதன்கிழமை நாட்டு மக்களுக்கு அவர் விசேட உரையாற்றவுள்ளார் என்றும் தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று செய்தியாளர்களிடம் அவர் இதனைத் தெரிவித்தார். அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:

நாட்டின் பொருளாதாரம் ஸ்திரமான நிலையை நோக்கி நகர்ந்து கொண்டு செல்கின்றது. இந்தியா, சீனா, பாரிஸ் கழகம் உள்ளிட்டவற்றுடன் சமாந்தரமான பேச்சுக்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

அந்நாடுகள் இலங்கையை பொருளாதார நெருக்கடியில் இருந்து மீண்டெழும் நாடாக ☞ 2

## நெருக்கடியை கண்டு ஓடுவோரிடமிருந்து ஒருபோதும் நாட்டுக்கு நன்மை கிட்டாது

### ரணில் மட்டக்களப்பில் தெரிவிப்பு

நாட்டின் நெருக்கடியை கண்டு ஓடிப்போகும் தலைவர்களிடமிருந்து நாட்டுக்கு நன்மையை எதிர்பார்க்க முடியாது என்று ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க தெரிவித்தார்.

மட்டக்களப்பு மாநகர சபை கேட்போர் கூடத்தில் நேற்று நடைபெற்ற மட்டக்களப்பு மாவட்ட ஐக்கியதேசியக்கட்சியின் பிரதிநிதிகளுடனான சந்திப்பிலேயே ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க இதனைத் தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:

மட்டக்களப்பில் அரசியல் மற்றும் பொது அமைப்புகளைச் சேர்ந்த பலரைச் சந்திக்கும் வாய்ப்பு எனக்குக் ☞ 2

## அதானியின் பூநகரி காற்றாலைக்கு ஆணைக்குழு அனுமதி நிராகரிப்பு

மன்னார் மற்றும் பூநகரிப்பிரதேசத்தில் 484 மெகாவோட் காற்றாலை உற்பத்திநிலையங்களை வரையறுக்கப்பட்ட அதானி கிறீன் எனர்ஜி நிறுவனம் அமைப்பதற்கான அனுமதியை பொதுப்பயன்பாடுகள் ஆணைக்கழு நிராகரித்துள்ளதாக சண்டே டைம்ஸ் செய்தி வெளியிட்டுள்ளது.

குறித்த செய்தியில், இலங்கை மின்சார சபைக்கும் அதானி நிறுவனத்துக்கும் இடையிலான மின்சக்திக் கொள்வனவு உடன்படிக்கை சமர்ப்பிக்கப்படாமையினாலும், திட்டத்தின் முழுமையான வரைவு உள்ளிட்ட அடிப்படைத் தகவல்களும் சமர்ப்பிக்கப்படாமையினாலும் அனுமதி வழங்குவதை பொதுப்பயன்பாடுகள் ஆணைக்குழு நிராகரித்துள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

இலங்கை மின்சார சபையின் பதில் முகாமையாள ☞ 2

## தொழில் முயற்சியாளர்களுக்கு ரூ. 50 ஆயிரம் வழங்கத் திட்டம்

தொழில் முயற்சியாளர்களுக்கு முதல் சுய தொழில் உதவியாக 50,000 ரூபா வழங்கும் வேலைத்திட்டத்தை ஆரம்பிக்கவுள்ளோம் என்று தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சர் மனுஷ நாணயக்கார தெரிவித்தார்.

தொழில் மற்றும் வெளிநாட்டு வேலை வாய்ப்பு அமைச்சு மற்றும் இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம் இணைந்து இந்த நடவடிக்கையை ஆரம்பிக்கவுள்ளதாகவும், நாட்டில் தொழில் முயற்சியாளர்களை உருவாக்கி ஊக்குவிப்பதற்கான அவசியத்தை குறிப்பாக விளக்கி அதற்கான ஏற்பாடுகள் தயாராக இருப்பதாகவும் அமைச்சர் தெரிவித்தார்.

ஜயகமுசிறீலங்கா ☞ 8

## தமிழ் அரசு, காங்கிரஸ் ஆகிய கட்சிகளும் பொதுவேட்பாளரை ஆதரிக்கவேண்டும்

### ரெலோ தலைவர் செல்வம் கோரிக்கை

தமிழ்அரசுக்கட்சியும் தமிழ்க் கொங்கிரஸ் கட்சியும் தமிழ்ப் பொது வேட்பாளரை ஆதரிக்க வேண்டும் என்று ரெலோ தலைவரும் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான செல்வம் அடைக் ☞ 9

## புலிகள் மீதான தடையை நீக்க லண்டன் ஆணைக்குழு மறுப்பு

தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தை தடைசெய்யப்பட்ட இயக்கங்களின் பட்டியலில் இருந்து நீக்குமாறு கோரி லண்டன் (ஐக்கிய இராச்சியம்) நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட மனு நிராகரிக்கப்பட்டுள்ளது.

ஐக்கிய இராச்சியத்தின் தடை செய்யப்பட்ட இயக்கங்களின் மேன்முறையீட்டு ஆணைக் குழுவினால் இந்த மனு நிராகரிக்கப்பட்டுள்ளது.

நாடு கடந்த தமிழீழ அரசாங்கம் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தினை தடைசெய்யப்பட்ட இயக்கங்களின் பட்டியலில் இருந்து நீக்குமாறு கோரி ஐக்கிய ☞ 2

## புலிகளிடம் இருந்து என்னை பிரித்தெடுத்தவர் ஜனாதிபதியே

### கருணா ஒப்புதல் வாக்குமூலம்

போர் வேண்டாம் என்று முடிவெடுத்த என்னை விடுதலைப் புலிகள் அமைப்பிலிருந்து வரவழைத்தவர் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தான் என்று கருணா அம்மான் எனப்படும் விநாயகமூர்த்தி முரளிதரன் தெரிவித்துள்ளார்.

காலியில் ஐக்கிய தேசியக் கட்சியின் அலுவலகத் திறப்பு விழா நேற்று நடைபெற்றது. அதில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் அங்கு ☞ 2

காலைக்கதிர்
Kalaikkathir

## இனி இது .....

கூறுகின்றனர்.

கோபால்ட் என்பது மின்சார வாகனங்கள் மற்றும் பேற்றறிகளில் பரவலாகப் பயன்படுத்தப்படும் ஒரு முக்கியமான கனிமமாகும், மேலும் இது பசுமை ஆற்றல் மாற்றத்தில் ஒரு முக்கிய அங்கமாகவும் கருதப்படுகிறது.

ஜனவரிமாதம், ஜமைக்காவைத் தளமாகக் கொண்ட சர்வதேச கடற்பரப்பு ஆணையத்தை இந்தியா அணுகி, மத்திய இந்தியப் பெருங்கடலில், மாலத்தீவின் கிழக்கே மற்றும் இந்தியக்கடற்கரையிலிருந்து சுமார் 1,350 கிமீ (850 மைல்) தொலைவில் உள்ள கோபால்ட் நிறைந்த அஃபனசி நிகிடின் கடல் மலையை ஆராய்வதற்கு அனுமதி கோரி இருந்தது.

1994 இல் உருவாக்கப்பட்ட சர்வதேச கடற்பரப்பு ஆணையம் (ஐஎஸ்ஏ) என்பது ஒரு தன்னாட்சி சர்வதேச அமைப்பாகும், இது கடற்பரப்பில் பொருளாதார நடவடிக்கைகளை ஒழுங்குபடுத்துவதற்காக ஐக்கிய நாடுகளின் கடல் சட்டத்தின் மாநாட்டால் அதிகாரமளிக்கப்பட்டது.

15 ஆண்டுகளுக்கும் மேலாக முன்மொழியப்பட்ட பகுதியில் விரிவான இயற்பியல், புவியியல், உயிரியல், கடல்சார் மற்றும் சுற்றுச்சூழல் ஆய்வுகளை நடத்துவதற்கானதனது விருப்பத்தை அடைய விண்ணப்பித்திருக்கும் இந்தியா அதற்காக 5 லட்சம் டொலர் கட்டணத்தைச் செலுத்தியுள்ளது. கடல் மவுண்ட் 3,000 சதுர கிமீ (1,158 சதுர மைல்கள்) பரப்பளவில் 150 தொகுதிகளைக் கொண்டுள்ளது. ஆனால் இந்தியாவின் விண்ணப்பத்தை மதிப்பிடும்போது, அந்த மலை அமைந்துள்ள பகுதி மற்றொரு நாட்டின் கண்டத் தட்டின் உரிமை கோரும் ஒரு பகுதிக்குள் முற்றிலும் இருப்பது கண்டறியப்பட்டது.

இந்த விடயம் குறித்து இந்தியாவிற்கு ஐஎஸ்ஏ அறிவித்தாலும் உரிய நாட்டின் பெயரை அது குறிப்பிடவில்லை. என்றாலும், கடலுக்குஅடியில்உள்ளஆணையம் குறிப்பிடும் நாடு இலங்கை என்றே நிபுணர்கள் நம்புகிறார்கள் என்று அல் ஜசீரா தெரிவித்துள்ளது.

ஒரு நாட்டின் கண்டத் தட்டு (கான்டினென்டல்ஷெல்ஃப்) என்பது கடலுக்கு அடியில் உள்ள அதன் நிலப்பரப்பின் விளிம்பாகும்.

இலங்கையின் உரிமைக்குரிய பகுதிக்குள் இது வருவதால் அது சீனாவின் கைகளுக்கும் செல்லும் சாத்தியங்கள் அதிகம் என்பதே இந்தியாவின் தற்போதைய கவலை.

**இடிமின்னல்**
(idiminnal@gmail.com)

## காஸா ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கொண் டதன் பின்னர் ஆற்றிய உரையிலேயே ஜனாதிபதி இதனைத் தெரிவித்தார்.

இதன்போது மௌலவி ஹாரித்தினால் தொழுகை நிகழ்த்தப்பட்டது. இதேவேளை, ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவின் பணிப்புரையின் பேரில் ஸ்தாபிக்கப்பட்ட காஸா சிறுவர் நிதியத்திற்கு காத்தான்குடி பெரிய ஜும்மா பள்ளிவாசல், 10,769,417 ரூபாயை நன்கொடையாக வழங்கியது. பிரார்த்தனையின் பின்னர், காஸா நிதியத்திற்கான காசோலை பள்ளிவாசல் நிர்வாகத்தினரால் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவிடம் கையளிக்கப்பட்டது.

இந்நிகழ்வில் மேலும் உரையாற்றிய ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க,

'நான் மட்டக்களப்புக்கு விஜயம் செய்திருக்கும் வேளையில், இந்த நிகழ்வுக்கு என்னை அழைத்தமைக்கு நன்றி. இந்த பள்ளிவாசல் முஸ்லிம்கலைக்கு சிறந்த உதாரணமாகக் விளங்குகிறது. காத்தான்குடி முஸ்லிம்கள் அரசர் காலத்திலிருந்து அங்கு வாழ்ந்து வந்த ஒரு பிரிவினர். மட்டக்களப்பின் அபிவிருத்திப் பணிகள் தொடர்பில் கலந்துரையாடுவதற்காக இங்கு வந்தேன். இந்த மாகாணத்தில் விவசாயத்தை நவீனமயமாக்குவதுடன் சுற்றுலாவை மேம்படுத்த எதிர்பார்க்கிறோம். அதேபோல், கல்வியையும் மேம்படுத்த வேண்டும்.

காஸா நிதியத்திற்கு உங்கள் ஆதரவை வழங்குவதற்காக இன்று எனக்கு இங்கு வருமாறு அழைப்பு விடுக்கப்பட்டது. காஸா விவகாரத்தில் அரசாங்கம் வலுவான நிலைப்பாட்டை கொண்டுள்ளது. அது என்றும் மாறாது. ஹமாஸுக்கும் இஸ்ரேலுக்கும் பிரச்சனைகள் இருக்கலாம். அதற்காக, காஸா மக்களை பழிவாங்க வேண்டாம்.

பாலஸ்தீனம் தீர்வை எட்ட உதவ வேண்டும். 5 வருடங்களுக்குள் பலஸ்தீன அரசை நிறுவ வேண்டும் என்பதே எமது நிலைப்பாடாகும். காலக்கெடு இல்லாமல் பேசுவதில் அர்த்தமில்லை. ஏனென்றால், 40, 50 வருடங்களாக இது குறித்து பேசப்பட்டது. எனவே, காலக்கெடுவின் அடிப்படையில் அடுத்தகட்ட நடவடிக்கைகளை முன்னெடுக்க வேண்டும்.

இஸ்ரேலின் பாதுகாப்பு பிரச்சினை இருந்தால் அது குறித்துத் தனியாக விவாதிக்கலாம். ஆனால் பாலஸ்தீன அரசு உருவாக்கப்பட வேண்டும். ஏராளமான மக்கள் கொல்லப்பட்டுள்ளனர். இதனால் அதிருப்தி அடைந்திருக்கிறோம். அதை நாம் ஏற்றுக்கொள்ளவே முடியாது.

காஸா போரினால் பாதிக்கப்பட்ட குழந்தைகளுக்காக காஸா நிதியத்தை ஆரம்பிக்க இலங்கை அரசாங்கம் தீர்மானித்துள்ளது. அதன்படி முதலில் ஒரு மில்லியன் டொலரை வழங்க ஏற்பாடு செய்தோம். நாம் சிறிய நாடாக இருந்தாலும், வங்குரோத்து நிலையை அறிவித்திருக்கும் வேளையிலும் ஒரு மில்லியன் டொலரை வழங்க முன்வந்திருக்கிறோம். இதற்கு பொது மக்கள் ஆதரவு தருமாறு கேட்டுக் கொண்டுள்ளோம். எனவே இந்த நன்கொடைக்கு எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அதேபோல் உடல்களை அடக்கம் செய்வது குறித்த பிரச்சினைகளை முஸ்லிம் மக்கள் எதிர்கொண்டுள்ளனர். அது குறித்து ஆராய உலக சுகாதார அமைப்பின் திட்டத்தை செயல்படுத்தாமல் தனி குழு நியமிக்கப்பட்டது. இதனால் முஸ்லிம் மக்கள் மனம் நொந்துள்ளனர்.

எனவே, உடலை அடக்கம் அல்லது தகனம் செய்தல் அல்லது உடலை விரும்பினால் மருத்துவ பீடத்திடம் ஒப்படைக்கலாம் என்ற புதிய சட்டத்தை கொண்டு வரத் தீர்மானித்திருக்கிறோம். எனவே எதிர்காலத்தில் இவ்வாறான பிரச்சினைகள் ஏற்படாது.

நாட்டின் வீழ்ச்சியடைந்த பொருளாதாரத்தை மீட்டெடுப்பதற்கு நான் முன்னுரிமை அளித்துள்ளேன். அந்த இலக்கை மிகக் குறுகிய காலத்தில் அடையலாம். அதன்பிறகு, நாட்டின் மற்றைய பிரச்னைகளைத் தீர்ப்பதில் கவனம் செலுத்தப்படும். அத்துடன், மக்களுக்கு இலவச காணி உரிமையை வழங்கும் வகையில் உறுமய வேலைத்திட்டம் செயற்படுத்தப்படுகிறது என்றார்.

## நெருக்கடியை ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கிடைத்தது. இன்று நாடு மிகவும் கடினமான நிலையில் உள்ளது. கடந்த ஆட்சியின்போது, இந்த நாட்டின் பொருளாதாரத்தை முன்னோக்கி கொண்டுசெல்வதற்கு, குறைந்தபட்சம் மூன்று பில்லியன் டொலர்களை கையிருப்பில் வைத்திருக்க வேண்டும் என்பதை கூறியிருந்தேன். அன்று எந்த அரசியல் கட்சியும் அந்த உண்மையை சொல்லவில்லை.

ஐக்கிய மக்கள் சக்தி உறுப்பினர்கள், மக்கள் விடுதலை முன்னணியினர் இது பற்றி என்ன சொன்னார்கள்?. நாங்கள் மட்டுமே நாட்டுக்கு உண்மையைக் கூறியதால், நாங்கள் பொய்ப் பரப்புரை செய்கிறோம் என்று மக்கள் நினைத்தனர். அரசியல் நிலைப்பாடு எவ்வாறானதாக இருந்தாலும், கருத்து வேறுபாடுகள் இருந்தாலும் நாட்டின் எதிர்காலத்திற்காக உண்மையைப் பேச வேண்டும். அரசியலில் நாம் எப்போதும் உண்மையையே பேச வேண்டியது கட்டாயமாகும்.

நாட்டில் போராட்டம் வலுவடைந்திருந்த காலத்தில், அப்போதைய ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ச, சஜித் பிரேமதாசவிடம் இந்த நாட்டைப் பொறுப்பேற்குமாறு கோரினார். நாட்டின் எதிர்காலத்தைப் பொறுப்பேற்க அவர்கள் முன்வரவில்லை. இப்போது நாட்டின் ஆட்சி அதிகாரத்தை கோரும் மக்கள் விடுதலை முன்னணி அந்த கோரிக்கையைப் பொருட்படுத்தவே இல்லை. இவ்வாறானவர்களை நாட்டின் தலைவர்களாக்க வேண்டுமா?

சவால்களை கண்டு அஞ்சாமல் அதற்கு ஈடுகொடுத்து ஆளும் தரப்பை நாம் அமைத்தோம். தற்போது நாடு வங்குரோத்து நிலையில் இருந்து மீண்டு வருகிறது. சவால்களுக்கு மத்தியில் நாட்டை ஏற்றுக்கொண்ட என்னையும் பதவி விலகுமாறு, வலியுறுத்திய எதிர்க்கட்சிகள் பல்வேறு குற்றச்சாட்டுகளை முன்வைத்தன.

அந்த நேரத்தில் பதவி விலகியிருந்தால் நாட்டின் தற்போதைய நிலை என்னவாகியிருக்கும். நாட்டுக்கு மிகவும் நெருக்கடியான நேரத்தில் நான் நாட்டை முன்னோக்கி கொண்டு சென்றேன். இந்நாட்டு மக்களுக்காக வங்குரோத்து நிலையிலிருந்து மீள்வதற்கான பல முயற்சிகளை செய்துள்ளேன்.

நாட்டின் பொருளாதாரம் வீழ்ச்சியடைந்தபோதும் அரச ஊழியர்களின் கொடுப்பனவுகள் அதிகரிக்கப்பட்டன. சமூர்த்தி கொடுப்பனவை இரட்டிப்பாக்கி அஸ்வசும திட்டத்தை செயற்படுத்தினோம். காணி உறுதி இல்லாத மக்களுக்கு இலவச உறுதிப் பத்திரம் வழங்கும் திட்டம் ஆரம்பிக்கப்பட்டது. மட்டக்களப்பு மாவட்டத்தில் மட்டும் 27,000 இற்கும் மேற்பட்ட இலவசக் காணி உறுதிப் பத்திரங்கள் வழங்கப்படவுள்ளன. அவற்றை இரண்டு மாதங்களுக்குள் வழங்குமாறு அதிகாரிகளுக்கு பணிப்புரை விடுத்துள்ளேன்.

வங்குரோத்து நிலையில் இருக்கும்போது இவற்றை செய்ய முடிந்ததால், அதிலிருந்து மீண்டு வந்த பின்னர் நாட்டு மக்களுக்கு இன்னும் அதிகமான நன்மைகளைச் செய்ய முடியும். அதற்காக நாம் அனைவரும் ஒற்றுமையாக முன்னேற வேண்டிய நேரம் வந்துள்ளது என்றார்.

## புலிகள் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இராச்சியத்தின் தடை செய்யப்பட்ட இயக்கங்களின் மேன்முறையீட்டு ஆணைக்குழுவிடம் மனுவொன்றைத் தாக்கல் செய்திருந்தது.

தமிழீழ விடுதலைப்புலிகள் அமைப்பு செயலிழந்துள்ள நிலையில் அந்த அமைப்பினை தடைசெய்யப்பட்ட அமைப்புக்களின் பட்டியலில் வைப்பது ஏற்புடையதல்ல என்று நாடுகடந்த தமிழீழ அரசு தனது மனுவில் சுட்டிக்காட்டியிருந்தது.

இந்நிலையில் குறித்த மனுவைப் பரிசீலனைக்கு எடுத்துக் கொண்ட ஐக்கிய இராச்சியத்தின் தடை செய்யப்பட்ட இயக்கங்களின் மேன்முறையீட்டு ஆணைக்குழுவானது, தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் செயலிழந்து காணப்பட்டாலும் அதுவொரு ஆயுதக்குழுவாக இருப்பதால் மீளுருவாக்கம் செய்யப்படுவதற்கு சந்தர்ப்பங்கள் ஏற்படலாம் என்ற அடிப்படையில் அதன் மீதான தடையை நீக்கமுடியாது என்று குறிப்பிட்டு மனுவை நிராகரிப்பதாக அறிவித்துள்ளது.

ஐக்கிய இராச்சியத்தின் நாடாளுமன்றத்தினால் ஸ்தாபிக்கப்பட்ட ஐக்கிய இராச்சியத்தின் தடை செய்யப்பட்ட இயக்கங்களின் மேன்முறையீட்டு ஆணைக்குழு சுயாதீன நீதிமன்றமாக செயற்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.

## புலிகளிடம்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மேலும் தெரிவித்ததாவது:

நான் போரால் எமது இலக்குகளை அடைய முடியாது என்று தீர்மானத்தேன். போர் வேண்டாம் என்று தீர்மானித்தேன். அப்போது ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவே என்னை விடுதலைப்புலிகள் இயக்கத்திலிருந்து வரவழைத்தார். ஆனால் இதனைப் பலர் தவறாக புரிந்துகொண்டுள்ளாஜுர்கள். மஹிந்த ராஜபக்ஷ தான் என்னை அவ்வாறு வரவழைத்தார் என்று கருதுகின்றார்கள். அது தவறானதாகும்.

அதேநேரம், கோட்டாபய ராஜபக்ச தான் நாட்டை சீரழித்தார். அந்தநாட்டை ரணில்விக்கிரமசிங்கே தலைமையேற்று மீட்டு எடுத்தார். ஆகவே நாம் அவரை மீண்டும் ஜனாதிபதியாக்குவதன் ஊடாகவே நாட்டை கட்டியெழுப்ப முடியும் என்றார்.

## அதானியின்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ருக்கு பொதுப்பயன்பாடுகள் ஆணைக்குழு அனுப்பிவைத்துள்ள கடிதத்திலேயே மேற்கண்ட விடயம் குறிப்பிடப்பட்டுள்ளதாகவும் அச்செய்தியில் கூறப்பட்டுள்ளது.

அத்துடன் இந்திய அரசுடன் மேற்கொள்ளப்பட்ட புரிந்துணர்வு உடன்படிக்கையில் தவறவிடப்பட்ட ஆவணங்கள் உள்ளடக்கப்பட்டுள்ளன. இந்தத் திட்டத்திற்கு 2022ஆம் ஆண்டு மார்ச் மாதம் அமைச்சரவை அனுமதி அளித்திருந்ததோடு உடன்பாட்டில் கைச்சாத்திடுவதற்கான அனுமதியை சட்டமா அதிபர் திணைக்களம் வழங்கியிருந்தது.

அத்துடன் கிளிநொச்சி முதல் ஹபரணை வரையிலான 400 கிலோவோல்ட் மின்விநியோக கட்டமைப்பை நிர்மாணிப்பதற்கான செலவை ஈடுசெய்வதற்கான பொறிமுறையும் பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவுக்கு அறிவிக்கப்படவில்லை.

இந்தத் திட்டம் முன்னெடுக்கப்படவுள்ள பகுதிக்கு அண்மையில் முன்னெடுக்கப்படவுள்ள 50

தொடர்ச்சி 8ம் பக்கம்....

நிதி இராஜாங்க அமைச்சருக்கு

# யதார்த்தமற்ற பொருளாதார கருத்துக்கள் கவலையளிப்பு

தேர்தல்கள் நெருங்கி வரும் வேளையில், எதிர்க்கட்சிகளும் அவற்றின் முக்கிய ஆலோசகர்களும் பொருளாதாரத்தை நிர்வகிப்பது குறித்து யதார்த்தத்திற்கு மாறான கருத்துக்களை வெளியிடுவதைப் பார்ப்பது கவலையளிக்கிறது என்று நிதி இராஜாங்க அமைச்சர் செஹான் சேமசிங்க தெரிவித்துள்ளார்.

சர்வதேச நாணய நிதியத்தின் ஏற்பாட்டில் எந்தவொரு தலைகீழ் மாற்றமும் நாட்டில் எதிர்மறையான விளைவை ஏற்படுத்தும் என்று எச்சரித்த அவர், இரண்டு ஆண்டுகளுக்கு முன்னர் குழப்பத்தில் இருந்த இலங்கையின் பொருளாதார நிலப்பரப்பை மறுசீரமைப்பதில் சர்வதேச நாணய நிதியம் மற்றும் சர்வதேச பங்குதாரர்கள் முக்கிய பங்கு வகித்துள்ளனர் என்று குறிப்பிட்டார்.

குறுகியகால ஆதாயங்களைக்கூட வழங்காத தவறான வாக்குறுதிகளை வழங்குவதைத் தவிர்க்குமாறு அனைத்து எதிர்க்கட்சிகளையும் அவர்களின் ஆலோசகர்களையும் நான் கேட்டுக்கொள்கிறேன் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

தற்போதைய நிலையில் காலத்தின் தேவை நாட்டின் ஸ்திரத்தன்மையே தவிர அரசியல் விளையாட்டுகள் அல்ல என்று வலியுறுத்தியுள்ள இராஜாங்க அமைச்சர் செஹான் சேமசிங்க நாட்டின் எதிர்காலம் சம்பந்தமாகவே சிந்திக்க வேண்டும் என்றும் கூறினார்.

பொருளாதாரம் குறித்து பொறுப்பான உரையாடலில் ஈடுபடவும், எமது பொருளாதாரக் கொள்கைகள் உறுதியான மற்றும் யதார்த்தமான கோட்பாடுகள் மற்றும் உலகளவில் ஏற்றுக்கொள்ளப்பட்ட மற்றும் ஏற்றுக்கொள்ளப்பட்ட நல்ல நடைமுறைகளுடன் பொருளாதார வடிவமைப்பை அடிப்படையாகக் கொண்டிருப்பதை உறுதிசெய்யவும் அனைவரையும் கேட்டுக்கொள்வதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# அமைச்சருக்கான சம்பளத்தில் தண்ணீர்கூட வாங்கியதில்லை

நீதியமைச்சர் விஜேதாச தெரிவிப்பு

நான் தற்போது வகிக்கும் அமைச்சுப்பதவிக்காக வழங்கப்படும் ஊதியத்திலிருந்து ஒரு தண்ணீர் போத்தலைக்கூட வீட்டுப்பாவனைக்காக வாங்கியது கிடையாது.என்று நீதி, சிறைச்சாலைகள் அலுவல்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர் ஜனாதிபதி சட்டத்தரணி கலாநிதி.விஜயதாச ராஜபக்ஷ தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று நடைபெற்ற நிகழ்வின்போது சிவில் செயற் பாட்டாளர் யாமினிகமந்த எழுப்பிய கேள்விகளுக்கு பதிலளிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

2007ஆம் ஆண்டு கோப் அறிக்கை என் தலைமையிலேயே வெளியானது. அதுதொடர்பில் நடவடிக்கைகள் முன்னெடுக்க முயற்சித்தபோது அதனை தடுத்தமையால் நான் அரசாங்கத்தினை விட்டு வெளியேறினேன். அமைச்சுப்பதவியை துறந்தேன். அதன்பின்னர் 2007இல் அஜித்நிவாட் கப்ரால் போன்ற ஊழல்வாதிகளை மத்திய வங்கியின் ஆளுநராக கொண்டுவர வேண்டாம் என்று கூறி போராடினேன். அப்போதும் அமைச்சுப்பதவிகளைத் துறந்தேன்.

அரசகாப்புறுதிக்கூட்டுத்தாபனம், தேசிய வைத்தியசாலை, துறைமுகத்தின் நிலப்பகுதி ஆகியவற்றை தனியார்மயப்படுத்த முனைந்தபோது உயர்நீதிமன்றத்திற்கு சென்ற நானே வழக்குகளை தொடுத்து தடுத்தேன். அனைதது வங்களிகளில் ஐந்து சதவீதம் அரசுடமையாக்கும் வழக்கினையும் நானே முன்னெடுத்து வெற்றி பெற்றுக்கொடுத்தேன்.

நாடு பொருளாதார ரீதியாக வங்குரோத்து அடைந்தபோது நாங்கள் 53 பேர் சென்று 46 பேரைக்கொண்ட எதிர்க்கட்சியை நாட்டினைப் பொறுப்பேற்று நடத்துமாறு கோரினோம். ஆனால் அவர்கள் அதனைச் செய்யவில்லை. அதனால்தான் நான் உள்ளிட்ட 20பேர் நாட்டினை மீட்கும் செயற்பாட்டில் கைகோர்த்தோம். தற்போதைய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அதற்கு தலைமை தாங்குவதற்கு முன்வந்தார்.

நான் தற்போது வகிக்கும் அமைச்சுப்பதவிக்காக வழங்கப்படும் ஊதியத்திலிருந்து ஒரு தண்ணீர்போத்தலைக்கூட வீட்டுப் பாவனைக்காக வாங்கியது கிடையாது. ஆனால் நான் பத்து பில்லியனுக்கும் அதிகமான தொகையை நாட்டுக்காக வழங்கியிருக்கின்றேன் என்றார்.

காலைக்கதிர் Kalaikkathir

# காணி உறுதிகளும் ஆசிரியர் நியமனங்களும் மட்டு.மாவட்டத்தில் ஜனாதிபதியால் வழங்கல்





நாட்டு மக்களுக்கு உரிமைகளை வழங்குவதே தனது பிரதான நோக்கம் என ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க தெரிவித்தார். அத்துடன் திருகோணமலையை பிரதான பொருளாதார மையமாக அபிவிருத்தி செய்ய தீர்மானித்துள்ளதாகவும் ஜனாதிபதி தெரிவித்தார்.

அரசாங்கம் முன்னெடுத்து வரும் 'உறுமய' தேசிய வேலைத்திட்டத்தின் கீழ் மட்டக்களப்பு மாவட்டத்தில் காணி உறுதிகளை வழங்கும் நிகழ்வில் உரையாற்றும்போதே ஜனாதிபதி இதனைத் தெரிவித்தார்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் 27,595 குடும்பங்களுக்கு காணி உறுதிகளை வழங்கும் நிகழ்வு மட்டக்களப்பு, திராய்மடு மாவட்ட செயலக வளாகத்தில் ஜனாதிபதி தலைமையில் சனிக்கிழமை நடைபெற்றது.

இதற்கு முன்னதாக மட்டக்களப்பு திராய்மடு பிரதேசத்தில் 1,055 மில்லியன் ரூபா செலவில் நிர்மாணிக்கப்பட்டுள்ள மாவட்ட செயலகத்திற்கான புதிய கட்டடத்தை ஜனாதிபதி திறந்துவைத்தார்.

ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க பிரதமராக இருந்த போது, 2016 ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 11 ஆம் திகதி அப்போதைய உள்நாட்டலுவல்கள் அமைச்சர் வஜிர அபேவர்தன இந்த புதிய மாவட்ட செயலகத்தின் நிர்மாணப் பணிகளை ஆரம்பித்து வைத்தார்.

மட்டக்களப்பு மாவட்ட மக்களுக்கான சேவைகளை விஸ்தரித்து வினைத் திறனாக்கும் நோக்கில் இந்த புதிய மாவட்ட செயலகம் நிர்மாணிக்கப்பட்டுள்ளது. பெயர் பலகையைத் திரைநீக்கம் செய்து மாவட்ட செயலகத்தை திறந்து வைத்த ஜனாதிபதி, அங்கு கண்காணிப்பு விஜயத்தையும் மேற்கொண்டார்.

இதன்பின்னர் மட்டக்களப்பு மக்களுக்கு காணி உறுதிகளை வழங்கும் நிகழ்வு நடைபெற்றது.

மட்டக்களப்பு மாவட்டத்தில் காணி உரிமையற்ற 27,595 குடும்பங்களுக்கு உறுமய வேலைத்திட்டத்தின் கீழ் காணி உறுதிப் பத்திரங்கள் வழங்கப்படவுள்ளது. அதில் இதுவரை 2610 பேருக்கு காணி உறுதிப் பத்திரங்கள் வழங்கப்பட்டுள்ளன. இதுதவிர உயர்தர தேசிய பொறியியல் டிப்ளோமா நிறுவனத்தில் ஆங்கில டிப்ளோமா பெற்ற 252 பேருக்கும் இன்று ஜனாதிபதி தலைமையில் ஆசிரியர் நியமனம் வழங்கப்பட்டது.

காணி உறுதிப் பத்திரங்களை வழங்கும் நிகழ்வில் உரையாற்றிய ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க -

"திருகோணமலையை பிரதான பொருளாதார மையமாக அபிவிருத்தி செய்ய தீர்மானித்துள்ளோம். அண்மையில் இந்திய வெளிவிவகார அமைச்சர் இலங்கை வந்த போது அதற்கு இந்தியாவின் ஆதரவைப் பெறுவது குறித்து விரிவான கலந்துரையாடல் இடம்பெற்றது. விவசாய நவீனமயமாக்கல் திட்டத்தின் கீழ் இந்தப் பகுதிகளில் பாரியளவிலான விவசாய செயற்பாடுகளைத் தொடங்க திட்டமிட்டுள்ளோம். மட்டக்களப்பு மற்றும் திருகோணமலையில் அபிவிருத்தி செய்யப்படாத மகாவலி காணிகளை அபிவிருத்தி செய்யும் வேலைத்திட்டமும் விரைவில் ஆரம்பிக்கப்படவுள்ளது.

மேலும், வெருகலாறு முதல் அறுகம்பே வரையில் சுற்றுலாத்துறையை மேம்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது. மட்டக்களப்பு கோட்டையை தொல்பொருள் திணைக்களத்தின் கீழ் சுற்றுலாத் துறைக்காக அபிவிருத்தி செய்ய எதிர்பார்க்கப்படுகிறது. அதன் பின்னர் இந்தப் பிரதேசத்திற்கு ஒரு சிறந்த ஹோட்டல் கிடைக்கும்.

மேலும் இப்பகுதியில் பால் உற்பத்தித் துறையை மேம்படுத்தவும் எதிர்பார்க்கப்படுகிறது. இந்த ஆண்டு பொருளாதார மாற்றச் சட்டம் நிறைவேற்றப்பட்ட பின்னர், பாரிய பணிகள் இங்கு செயல்படுத்தப்பட உள்ளன. இதன்படி திருகோணமலையை பிரதான ஏற்றுமதி பொருளாதா மையமாக மாற்ற முடியும்.

கிழக்குப் பல்கலைக்கழகம் மற்றும் தென்கிழக்கு பல்கலைக்கழகம் ஆகிய இரண்டும் இங்கு அமைந்துள்ளன. இப்பிரதேசத்தில் கல்வியை மேலும் மேம்படுத்த திட்டமிட்டுள்ளோம். தொழிற்கல்வித்துறையின் சீர்திருத்தத்தின் மூலம் அதிகளவான இளைஞர்களுக்கு தொழிற்பயிற்சி வாய்ப்புகளை வழங்க முடியும். மூன்று, நான்கு ஆண்டுகளாக ஆசிரியர்களை நியமிக்க முடியாததால், பாடசாலைக் கல்வி மேம்பாட்டிற்காக, ஆசிரியர் நியமனமும் வழங்கப்பட்டது.

நம் நாட்டில் வேலையில்லா திண்டாட்டம் ஒரு பாரிய பிரச்சினையாக மாறிவிட்டது. அதற்கேற்ப, புதிய அபிவிருத்தித் திட்டத்தின் மூலம் இளைஞர்களுக்கு வேலை வாய்ப்புகளை உருவாக்க வேண்டும். நாங்கள் மிகவும் கடினமான நேரத்தை எதிர்கொண்டோம். இந்நாட்டின் சாதாரண மக்கள் மிகவும் பாதிக்கப்பட்டுள்ளனர். நாடு மீண்டும் அபிவிருத்தி அடையும் போது அந்த மக்களை ஒருபோதும் மறக்க மாட்டோம்.

அதன்படி மக்களுக்கு முழு உரிமையுள்ள காணி உரிமை வழங்கும் உறுமய திட்டத்தை நடைமுறைப்படுத்தினோம். இப்போது உங்களுக்கு ஒரு நிலத்தின் சட்டபூர்வ உரிமை உள்ளது. யாரும் அடிபணிந்து வாழத் தேவையில்லை. குறைந்த வருமானம் பெறும் மக்களுக்கு 'அஸ்வெசும' நிவாரணத் திட்டத்தை செயல்படுத்தினோம். தற்போது விவசாயிகளுக்கு காணி உரிமை வழங்கப்பட்டுள்ளது. இப்பகுதிக்கு 27 ஆயிரத்துக்கும் மேற்பட்ட காணி உறுதிப் பத்திரங்கள் வழங்கப்பட உள்ளன. இந்தக் காணி உறுதிப்பத்திரங்களை வினைத்திறனாக வழங்க சம்பந்தப்பட்ட அனைத்து அரசாங்க அதிகாரிகளையும் கிராமங்களுக்கு அனுப்புவதற்கான வேலைத்திட்டத்தையும் நாங்கள் தயாரித்துள்ளோம்.

அப்போது, இந்த காணி உறுதிகளைப் பெற்றுக் கொள்வதற்கு மக்கள் மாவட்ட செயலகத்திற்கோ பிரதேச செயலகத்திற்கோ செல்லத் தேவையில்லை. மாவட்ட செயலாளர், பிரதேச செயலாளர், காணி உத்தியோகத்தர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் ஆளுநர் ஆகியோர் கிராமத்திற்குச் சென்று காணி உறுதிகளை மக்களுக்கு வழங்க ஏற்பாடு செய்வார்கள். எதிர்வரும் திங்கட்கிழமை அந்த வேலைத்திட்டத்தை தொடங்கி விரைவில் நிறைவு செய்ய அறிவுறுத்தியுள்ளேன். எனக்கு ஒரே ஒரு குறிக்கோள்தான் உள்ளது. அந்த உரிமையை மக்களுக்கு வழங்கப்பட வேண்டும். காணி உரிமையை பாதுகாக்குமாறு அனைவரையும் கேட்டுக்கொள்கிறேன்." என்று ஜனாதிபதி தெரிவித்தார்.

கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான் தெரிவிக்கையில் -

ஜனாதிபதி ரணில்விக்ரமசிங்கவை வரவேற்பதில் பெருமைகொள்கிறோம். இந்தத் திட்டம் அவரால் தொடங்கப்பட்ட திட்டம் என்பதைக் கூற வேண்டும். அமைச்சர் வஜிர அபேவர்தனவால் வழங்கப்பட்ட சுமார் ஒரு பில்லியன் ஷரூபா ஒதுக்கீட்டின் கீழ் இந்த திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. அன்று, இத்திட்டத்தை ஆரம்பித்து வைத்த ரணில் விக்ரமசிங்க அவர்களே இன்று ஜனாதிபதியாக இந்தக் கட்டடத்தைத் திறந்து வைத்துள்ளார். நாட்டின் உற்பத்தியை அதிகரிக்க விவசாய நவீனமயமாக்கல் வேலைத்திட்டத்தை நடைமுறைப்படுத்த அர்ப்பணிப்புடன் செயற்படுமாறு ஜனாதிபதி எப்பொழுதும் எமக்கு ஆலோசனை வழங்கியுள்ளார். மட்டக்களப்பு மாவட்டத்தில் இத்திட்டத்தை நடைமுறைப்படுத்த விவசாய திணைக்களத்துடன் இணைந்து செயற்படுகின்றோம்.

மட்டக்களப்பு மாவட்டம் அதிகளவான விவசாயிகளைக் கொண்ட விவசாய மாவட்டம் என்பதைக் கூற வேண்டும். அத்துடன் நாட்டின் மிக நீளமான கடற்கரை கிழக்கு மாகாணத்தில் அமைந்திருப்பதால் நீர்வாழ் உயிரினங்களை வளர்ப்பத்தை ஊக்குவிப்பதற்கான சாத்தியக்கூறுகளை ஜனாதிபதி எமக்கு எடுத்துக் காட்டியுள்ளார். எனவே, மீன்வளர்ப்புத் திட்டங்களுக்கு உள்நாட்டு விவசாயிகள் மற்றும் வர்த்தகங்களை ஊக்குவிக்க நாம் தற்போது செயற்பட்டு வருகிறோம். மேலும், எங்களிடம் அதிக அளவில் கணிமப் படிவுகள் உள்ளது. அதற்கு பெறுமதி சேர்த்து, கனிமத்துறையை மேம்படுத்த நடவடிக்கை எடுக்குமாறும் ஜனாதிபதி பணிப்புரை விடுத்துள்ளார். ஜனாதிபதியின் வழிகாட்டலின் கீழ் இத்திட்டங்கள் அனைத்தையும் அபிவிருத்தி செய்வதற்கு நாம் மிகவும் ஊக்கத்துடன் செயற்பட்டு வருகின்றோம்' என்று ஆளுநர் தெரிவித்தார்.

மட்டக்களப்பு மாவட்ட ஒருங்கிணைப்புக் குழு இணைத் தலைவர் ஏ. எல். எம். அதாவுல்லா -

"மட்டக்களப்பு மக்களுக்கான புதிய மாவட்ட செயலக கட்டடத் திறப்பு விழா, காணி உறுதிப்பத்திரங்கள் வழங்கும் நிகழ்வு, ஆசிரியர் நியமனம் வழங்கும் நிகழ்வு என்பவற்றில் கலந்துகொள்ள ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க வருகை தந்தமை, வரலாற்று சிறப்புமிக்க நிகழ்வாகும். இப்போதெல்லாம் தேர்தல் பற்றித்தான் எல்லோரும் கதைக்கிறார்கள். வேட்பாளர் யார் என்று கேட்கிறார்கள். மேலும் அரசியல் தலைவர்கள் யாழ்ப்பாணம் சென்று தமிழ் மக்களுக்கு பல்வேறு வாக்குறுதிகளை வழங்குகின்றனர். தமிழ் மக்களுக்கு நிவாரணம் வழங்க வேண்டும். உங்களால்தான் அனைவரும் அந்தக் கருத்துக்கு வந்ததில் பெருமை கொள்கிறோம்.

போரால் நாம் இழந்தது ஏராளம். இனி இது போன்ற பிரச்சினைகள் ஏற்படாமல் அனைத்து மக்களும் ஒற்றுமையுடன் வாழக்கூடிய சூழலை உருவாக்குவது நமது பொறுப்பு. இந்த நாட்டில் வாழும் சிங்கள, தமிழ், முஸ்லிம், என அனைத்து இன மக்களும் ஒன்றிணைந்து வாழக்கூடிய ஒரு நாடு உருவாகும் என இந்நாட்டு மக்கள் எதிர்பார்க்கின்றனர். மக்கள் அதிகாரத்தை வழங்கினால், நாட்டின் பொருளாதாரத்தை வலுப்படுத்த முடியும். - என்று தெரிவித்தார்.

கிராமிய வீதிகள் அபிவிருத்தி இராஜாங்க அமைச்சர் சிவநேசதுரை சந்திரகாந்தன் தெரிவிக்கையில் -

நாடு மிக மோசமான பொருளாதார சிக்கலில் இருந்தபோது நாட்டைப் பொறுப்பேற்று ஜனாதிபதி பல கொள்கைகளை அமுல்படுத்தியுள்ளார். இந்தக் கொள்கைகள் நீடித்து நிலைக்க வேண்டுமாயின், மக்களும் உறுதியான மனநிலையுடன் இருக்க வேண்டும். குறிப்பாக சம்பள உயர்வுகளைக் கோரி ஆங்காங்கே ஆர்ப்பாட்டங்கள் நடத்தப்படுகின்றன. நாடு மிக மோசமான பொருளாதார நிலையில் இருக்கும்போது, எவ்வாறு வேலை வாய்ப்புக்களை வழங்குவது, சம்பள உயர்வுகளை வழங்குவது என்ற கேள்வி இருக்கிறது.

இந்த நாட்டை கட்டியெழுப்பி, எதிர்கால இளைஞர்களுக்கு நம்பிக்கைக் கொடுக்க வேண்டும். இன்னமும் கடன் வாங்கி பயணிக்கப் போகிறோமா, அல்லது நாட்டை சரியாக நிர்வகித்து, சரியான எதிர்காலத்தை ஏற்படுத்தப் போகிறோமா என்பதை சிந்திக்க வேண்டும். இதற்காகவே ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க அவர்களுக்கு ஆதரவு வழங்கியுள்ளோம். தூரநோக்குடன் செயல்பட்டு, பொருளாதாரத்தில் நீடித்து நிலைக்க நாம் பணியாற்றி வருகிறோம். இந்த நிலைமையை தொடர்ந்து முன்னெடுக்க வேண்டிய பாரிய பொறுப்பு எங்களுக்கு இருக்கிறது. மட்டக்களப்பு மாவட்டம் மண்ணோடும், கடலோடும் சொந்தப் பொருளாதாரத்தில் நிற்கும் ஒரு மாவட்டம். இங்கு நீர்ப்பாசனத் திட்டங்களை ஒருங்கிணைப்பதற்கான பணிப்புரைகளை ஜனாதிபதி வழங்கியுள்ளார். இதனால் ஜனாதிபதியுடன் இணைந்து பணியாற்றிய வேண்டியது மிக முக்கியமான விடயமாகும். இதனைத்தவிர மாற்று வழிகள் இருப்பதாக எங்களுக்குத் தெரியவில்லை. உறுதியான தளம் இல்லாமல் நாங்கள் கட்டிடம் கட்ட முடியாது. எனவே, அரசியல் ரீதியாக எதிர்காலத்தில் சரியான முடிவுகளை எடுத்து நாட்டிற்காக நல்ல தலைவரை மக்கள் தெரிவுசெய்வார்கள் என்று நம்புகிறேன்." என்று தெரிவித்தார்.

வர்த்தக இராஜாங்க அமைச்சர் வியாழேந்திரன் -

"எமது நாட்டின் பொருளாதாரம் வீழ்ச்சியடைந்திருந்த நேரத்தில், முன்னாள் ஜனாதிபதி பலருக்கும் அழைப்பிவிடுத்தார். யாரும் இந்நாட்டைப் பொறுப்பேற்ற முன்வரவில்லை. அத்தியவசியப் பொருட்களைப் பெற்றுக்கொள்ள மக்கள் கையில் பணம் இருந்தாலும் வரிசைகளில் பல நாட்கள் நிற்க வேண்டிய நிலை காணப்பட்டது. இந்த நாடு மீண்டும் மீண்டுவரக்கூடிய சூழல் இருக்கவில்லை. அந்நேரத்தில் தற்போதைய ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க துணிச்சலாக முன்வந்து, வீழ்ச்சியடைந்திருந்த நாட்டை பொருளாதார ரீதியில் மீளக்கட்டியெழுப்ப நாட்டைப் பொறுப்பேற்றார்.

இருட்டைத் திட்டுவதற்கு பலர் இருந்தாலும் இருட்டை நீக்கி வெளிச்சத்தைக் கொண்டுவர ஒருவர் தேவை. அந்த ஒருவராக ஜனாதிபதி இந்த நாட்டைப் பொறுப்பேற்றார். அவரின் தலைமைத்துவத்தடன் முன்னெடுக்கப்பட்ட கூட்டு முயற்சியால் படிப்படியாக பொருளாதாரம் எழுச்சி கண்டு வருவது மிகவும் பாராட்டுக்குரியது.

நாடளாவிய ரீதியில் உறுமய காணி உறுதிப்பத்திரம் வழங்கும் பாரிய திட்டத்தை ஜனாதிபதி செயற்படுத்தி வருகின்றார். இதுவரை வசித்து வந்த காணிகளுக்கு உரிமையற்றவர்களாக மக்கள் இருந்தனர். ஆனால் தற்போது அந்த உரிமை மக்களுக்கே வழங்கப்படுகிறது. இதற்கு ஒத்துழைப்பு வழங்கும் மக்கள் பிரதிநிதிகள் உட்பட அரச அதிகாரிகள் அனைவருக்கும் நன்றி கூறுகிறேன். இன்று ஆசிரியர் நியமனங்களும் வழங்கப்பட்டன. இதன்மூலம் மட்டக்களப்பு மாவட்டம் கல்வித்துறையில் மேலும் வளர்ச்சியடையும்' என்று தெரிவித்தார்.

தேசிய பாதுகாப்பு தொடர்பான ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகரும் ஜனாதிபதி பணிக்குழாம் பிரதானியுமான சாகல ரத்நாயக்க, கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான், பிரதேச அரசியல் பிரதிநிதிகள், மட்டக்களப்பு மாவட்ட செயலாளர் ஜே. முரளிதரன், கிழக்கு மாகாண கல்விச் செயலாளர் எச்.இ.எம்.டபிள்யூ. ஜி.திஸாநாயக்க மற்றும் அரச அதிகாரிகள் பலர் இந்நிகழ்வில் கலந்துகொண்டனர். (05)

காலைக்கதிர்
Kalaikkathir

நமது பார்வை
உண்மை - நேர்மை - பக்கம் சாராமை
ஆசிரியபீடம்: இல.551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## சலிப்பூட்டும் வசனங்கள்

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இப்போதெல்லாம் எங்கு சென்றாலும் நான்தான் நாட்டை மீட்டேன், நெருக்கடி ஏற்பட்டபோது யாருமே பொறுப்பேற்க முன்வராதபோது நான்தான் அதனைப் பொறுப்பேற்றேன் என்று மீண்டும் மீண்டும் – சலிப்புத் தட்டும் வகையில் – கூறிவருகின்றார். எந்தவொரு அரச நிகழ்வுக்குச் சென்றாலும் திரும்பத் திரும்ப அவர் இதனையே தெரிவித்து வருகின்றார்.

அடுத்த அரசுத் தலைவர் தேர்தலில் போட்டியிடுவதற்கு எதிர்பார்த்துள்ள அவர், மக்களுக்கு இப்போது உருப்படியாகச் சொல்லிக்காட்டக்கூடிய ஒரே விடயம் அதுதான் என்று கருதுவதைப் புரிந்துகொள்ள முடிகின்றது. அதேநேரம் அவர்தான் நாட்டை மீட்டெடுத்தார் என்பதை மக்கள்தான் உணர்ந்து சொல்லவேண்டுமே தவிர, திரும்பத் திரும்பச் சொல்ல வேண்டியவர் அவர் அல்லர்.

ஆனி மாதம் 26 நாட்டு மக்களுக்கு ரணில் சிறப்புரை ஒன்றை ஆற்றவுள்ளார். அதிலும் அவர் தவறாது இந்த விடயத்தைக் குறிப்பிடுவார், அதாவது நானே நாட்டை மீட்டேன் – நெருக்கடியில் இருந்த நாட்டை பொறுப்பேற்க நான் மட்டுமே முன்வந்தேன் – என்று கட்டாயம் கூறுவார். அதற்கு முன்னதாக இலங்கை வங்குரோத்து நிலையில் இருந்து மீண்டுவிட்டது என்கிற அறிவிப்பு வரும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. அதை முன்வைத்து அவர் தனது இந்தப் புராண படலத்தை மீண்டும் பாடுவார் என்பது நிச்சயம்.

முன்னாள் அரச தலைவர் கோட்டாபயவுக்கு எதிராக போராட்டங்கள்வலுத்துநெருக்கடிஅதிகரித்திருந்தநிலையில், ஒரு முழுமையான முறைமை மாற்றத்திற்கு எதிர்க் கட்சிகள் –முயன்றுகொண்டிருந்தன. நாடாளுமன்றத்தின் ஊடாக சபாநாயகரைதற்காலிகஜனாதிபதியாக்கி, பொதுத்தேர்தலை நடத்தி நாட்டை மீட்பதற்கான அனைத்துத் திட்டங்களும் தீட்டப்பட்டிருந்தன. அதற்கு ரணில் விக்கிரமசிங்கவும்கூட ஆதரவு தெரிவித்திருந்தார். அது தொடர்பான கூட்டங்களில் பங்கேற்றிருந்தார். ஆனால் கடைசியில் அரசுத் தலைவர் பதவி பின்கதவால் கிடைக்கும் என்று தெரிந்ததும், எல்லாவற்றையும் அப்படியே கைவிட்டு அந்தப் பதவிக்காக ஓடியவர்தான் ரணில் விக்கிரமசிங்க என்பதையும் நாட்டு மக்கள் மறந்திருக்கமாட்டார்கள்.

ரணில்அப்படிநடந்துகொள்ளவில்லைஎன்றால், இப்போது மக்களால் தெரிந்தெடுக்கப்பட்ட ஒரு ஆட்சி இருந்திருக்கும். நாட்டின் பொருளாதாரமும் அரசியல் நிலமைகளும் இன்னும் சிறப்பாக இ–ருந்திருப்பதற்கான வாய்ப்பும் ஏற்பட்டிருக்கும். அதனையெல்லாம் சிதைத்துவிட்டு ரணில் ஒரு சந்தர்ப்பவாதியாக நடந்துகொண்டார் என்பதையும் மக்கள் நினைவில் கொண்டிருப்பார்கள். எனவே தானே நாட்டின் மீட்பர் என்று ரணில் மீண்டும் மீண்டும் சொல்வதால் மட்டும் மக்கள் மனங்களில் அவர் இடம்பிடித்துவிட முடியும் என்று கருதுவது வீண் முயற்சிதான்.

அவர் மட்டும் இல்லையென்றால் நாடு இதற்கு முன்னரே மிகச் சிறந்த ஒரு இடத்தை அடைந்திருப்பதற்கான வாய்ப்புக்களும் இருந்தன என்பது மக்களுக்கும் தெரியும் என்பதால்தான் அவர்கள் இதுவரையில் ரணிலை ஒரு மீட்பராகப் பார்க்கவில்லை. ஆதரவளிக்கவில்லை. அது தெரிந்துதான் ரணில் மீண்டும் மீண்டும் தான் தான் நாட்டை மீட்டவர் என்று போகும் இடமெல்லாம் சொல்லி வருகின்றார். விக்கிரமாதித்தன் போன்ற அவரது முயற்சிக்கு மிக மிகக் குறைந்த பயனே கிடைக்கிறது.

கடந்த 2 வருடங்களை மட்டும் கருத்தில் எடுத்து அவரை யாரும் எடைபோடப்போவதில்லை. அவரது கடந்தகால அரசியல் வாழ்க்கை முழுவதையும் கணக்கிட்டுத்தான் அதனைச் செய்யப்போகிறார்கள். நெருக்கடியில் இருந்து நாட்டை மீட்டேன் என்று ரணில் சொன்னாலும், அதன் பயன்களை மக்கள் அனுபவிக்கும்போதுதான் அவர்கள் அதனை உணரத் தலைப்படுவார்கள். இப்போதைக்கு மக்கள் இன்னும் இன்னும் நெருக்கடிகளுக்கே முகம் கொடுத்து வரும் நிலையில் தாம் மீண்டுவிட்டதான எந்த உணர்வும் அவர்களிடம் இல்லை.

சமையல் எரிவாயுவுக்கும் எரிபொருளுக்கும் வரிசை இல்லை, பொருள்களை சந்தையில் தேவையான அளவிற்குப் பெற்றுக்கொள்ள முடிகின்றது என்பது மட்டுமே மக்களுக்குநிவாரணமல்ல. முதலில்அவற்றைப்பெறுவதற்கு மக்களின்கைகளில்தாராளமாகப்பணம்இருக்கவேண்டும். ரணிலின் ஆட்சியில் அதற்கான வழி வகை எதுவும் ஏற்படாதபோது, அவர் நாட்டை நெருக்கடியிலிருந்து மீட்டார் என்பதை நம்புவது மக்களுக்குக் கடினமானதுதான். அதனால்தான் ரணில் எத்தனை தடவைகள் திரும்பத் திரும்பச் சொன்னாலும் மக்கள் அதனைக் காதில் வாங்கிக்கொள்வதாகத் தெரியவில்லை.

# இங்கிலாந்தில் கட்டாய இராணுவ சேவை !

# ரிஷி சுனக்கின் ஆளும்கட்சி தோல்வியை தழுவுமா ?

- ஐங்கரன் விக்கினேஸ்வரா

பிரதமரான ரிஷி சுனக்கின் பதவிக்காலம் முடிய உள்ளதால் வருகிற ஜூலை 4ஆம் திகதி அங்கு பொதுத்தேர்தல் நடைபெற உள்ளது.

இதனை முன்னிட்டு அங்கு அரசியல் கட்சிகள் தீவிர தேர்தல் பரப்புரையில் ஈடுபட்டு வருகின்றன. இதனால் அங்கு தேர்தல் களம் சூடுபிடித்துள்ளது. இந்தநிலையில் பிரதமர் ரிஷி சுனக் கூறுகையில், அடுத்த முறை கன்சர்வேட்டிவ் கட்சி ஆட்சிக்கு வந்தால் இளைஞர்களுக்கு கட்டாய ராணுவ சேவையை அமல்படுத்துவார் என்று அறிவித்துள்ளார்.



பிரித்தானியாவில் ஆளும் ரிஷி சுனக்கின் கட்சி மீண்டும் ஆட்சிக்கு வந்தால் கட்டாய இராணுவ சேவை நடைமுறைக்கு வரும் என்பதற்கு ஆதரவை விட எதிர்ப்பே வலுவடைந்துள்ளது. போர்க் காலங்களில் இத்தகைய சட்டம் கட்டாய, ஏன் வலுக்கட்டாய ஆட்சேர்ப்பு என்றே கருத இடமுண்டு.






உலகில் பல்வேறு நாடுகளில் குறுகிய காலத்திற்கு ராணுவத்தில் சேவை செய்யவேண்டும் என்ற கட்டாய பணி உள்ளது. குறிப்பாக போர்க் காலங்களில் இத்தகைய சட்டம் கட்டாய ஆட்சேர்ப்பு நடக்கும்.

இத்தகைய நாடுகளில் இதற்காக அரசியல் யாப்பு மூலம் சட்டங்களும் இயற்றப்பட்டுள்ளது.

தற்போது இங்கிலாந்தில் தேர்தல் நெருங்கி வரும் நிலையில், தனது வலதுசாரி கன்சர்வேடிவ் கட்சியினர் மீண்டும் தேர்ந்தெடுக்கப்பட்டால், கட்டாய இராணுவ சேவையை (ஊழஅிரடளழசல ஆடைவையசல ளுநசஎiஉந) மீண்டும் கொண்டு வரும் திட்டத்தை பிரதமர் ரிஷி சுனக் அறிவித்துள்ளார்.

**கட்டாய ராணுவ சேவை:**

18 வயதுடையவர்கள் முழுநேர இராணுவ வேலை வாய்ப்பு திட்டத்தின் கீழ் பணியாற்றக் கோரப்படுவர். ஐரோப்பாவில் கட்டாய ஆட்சேர்ப்பு பற்றி விவாதிப்பது இங்கிலாந்து நாட்டில் மட்டும் அல்ல.

2022இல் ஜேர்மன் அரசியல்வாதிகள் கட்டாய இராணுவ சேவையை புதுப்பிக்க பரிந்துரைத்த அதேவேளையில் லிதுவேனியா 2023 ஒகஸ்ட் மாதம் அதன் வரைவை நீட்டிக்கும் திட்டங்களை அறிவித்தது. இத்திட்டத்தில் தற்போது டென்மார்க்கும் இணைகிறது.

பிரித்தானிய பொதுத் தேர்தலுக்கு முன்பாக முக்கிய கொள்கை அறிவிப்பில், கன்சர்வேடிவ் கட்சியின் பிரதம மந்திரி ரிஷி சுனக், 18 வயது நிரம்பியவர்களை 12 மாதங்களுக்கு இராணுவத்தில் கட்டாய சேவை செய்ய உறுதியளித்துள்ளார்.

**இங்கிலாந்தில் ஜூலை 4 பொதுத்தேர்தல்:**

தற்போது இங்கிலாந்தில் பிரதமர் ரிஷி சுனக் தலைமையிலான கன்சர்வேட்டிவ் கட்சி ஆட்சி நடைபெற்று வருகிறது. இந்திய வம்சாவளிப்

அதன்படி நாட்டில் உள்ள அனைத்து இளைஞர்களும் ஒரு ஆண்டு முழுநேர ராணுவம் மற்றும் மீட்பு பணிகளில் ஈடுபடுத்தப்படுவார்கள் என கூறினார்.

**மீறினால் குற்றவியல் தண்டனை இல்லை:**

கன்சர்வேடிவ் ஆளும் தரப்பின் திட்டங்களை மீறிய இளைஞர்களுக்கு குற்றவியல் தடைகள் எதுவும் இருக்காது என்று உள்துறை செயலாளர் கூறியுள்ளார். தற்போதய உலகில் இளம் சமுதாயத்தை ஒன்றிணைக்கவும், இளைஞர்களுக்கு பகிரப்பட்ட நோக்கத்தை அளிக்கவும் இந்தக் கொள்கை உதவும் என்று பிரதமர் கூறியுள்ளார்.

கட்டாய ராணுவ சேவைக்கு செல்லாவிடினும், கிரிமினல் வழக்குகள் எதுவும் இருக்கப்போவதில்லை என்றும், இதற்காக யாரும் சிறைக்கு செல்ல மாட்டார்கள் என்றும் தெரிவிக்கப்பட்டது. பல இளைஞர்கள் தங்கள் சொந்த சமூகங்களுக்குள்ளேயே முடங்கி வாழ்கிறார்கள். அவர்கள் வெவ்வேறு மக்களுடன் கலக்கவில்லை என்பது கவலைக்குரியதாகும் என பிரதமர் தெரிவித்துள்ளார்.

**தொழிற்கட்சி எதிர்ப்பு:**

ஆயினும் எதிர்கட்சி இந்தத் திட்டங்களை திடமற்றவை என்றும் தேவையற்றவை என்றும் நிராகரித்துள்ளது. தொழிற்கட்சி இந்த அரசின் உறுதிமொழி ஒருபோதும் நிறைவேறாது என்றும் கூறியுள்ளனர்.

இந்த புதிய கட்டாய தேசிய சேவை பிரித்தானிய இளைஞர்களுக்கு வாழ்க்கையை மாற்றும் வாய்ப்பை வழங்கும். அவர்களுக்கு நிஜ உலக திறன்கள், புதிய விஷயங்களைக் கற்றுக்கொள்வதற்கும் அவர்களின் சமூகத்திற்கும் நமது நாட்டிற்கும் பங்களிப்பதற்கும் வாய்ப்பளிக்கும் எனவும் பிரதமர் சுனக் தெரிவித்துள்ளார்.

**சுவீடனில் கட்டாய சேவை:**

2010ம் ஆண்டில் நூறு ஆண்டுகளுக்கு பிறகு, சுவீடன் நாடு கட்டாய ராணுவ சேவையை ரத்து செய்தது. ஆனால் 2017 ஆம் ஆண்டில், அதை மீண்டும் தொடங்குவதற்கு வாக்களிக்கப்பட்டது.

இந்த முடிவிற்குப் பிறகு, ஜனவரி 2018 முதல் ஆண்கள், பெண்கள் என 4000 பேரை கட்டாய ராணுவ சேவைக்கு அழைக்க முடிவு செய்யப்பட்டது.

துருக்கியில் ராணுவ சேவை 20 வயதுக்கு

(9ஆம் பக்கம் பார்க்க..)

காலைக்கதிர் Kalaikkathir

# தமிழ் அரசியல் தலைவர்களின் நிலைப்பாடுகளை ஜெயசங்கருடனான சந்திப்பு வெளிப்படுத்துகிறது

## ஈ.பி.டி.பி. ஊடகப் பேச்சாளர் ரங்கன் குற்றச்சாட்டு

தமிழ் அரசியல் தலைவர்கள் மாறுபட்ட நிலையிலே செயற்பட்டு வருகிறார்கள் என்பதை இந்திய வெளிவிவகார அமைச்சருடனான சந்திப்பு வெளிப்படுத்தியுள்ளது. இது தமிழ் மக்களின் அரசியல் உரிமை பிரச்சினைக்கு முட்டுக்கட்டையாகவே இருக்கும் என ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் ஊடக பேச்சாளர் ஐயாத்துரை சிறீரங்கேஸ்வரன் தெரிவித்தார்.

யாழ். ஊடக அமையத்தில் நடைபெற்ற ஊடக சந்திப்பின்போதே அவர் இதனை தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் கூறுகையில் -

இந்திய வெளிவிவகார அமைச்சர் சுப்ரமணியம் ஜெயசங்கருடனான சந்திப்பில் மாறுபட்ட நிலைப்பாட்டையே தமிழ் அரசியல் தலைவர்கள் வெளிப்படுத்தியிருக்கிறார்கள். இது தமிழ் மக்களின் அரசியல் உரிமைப் பிரச்சினைக்கு தொடர்ந்தும் முட்டுக்கட்டையாகவே இருக்கும்.

அத்துடன் தமிழ் மக்களின் அரசியல் உரிமைப் பிரச்சினைக்கான தீர்வுகளை பெறுவதற்கு நடைபெறவுள்ள ஜனாதிபதி தேர்தல் வாய்ப்பின்போது பயன்படுத்திக்கொள்ள வேண்டும் என உதட்டளவில் பேசினாலும் உள்ளத்தில் இப்பிரச்சினையை நீடிக்கச் செய்வதே இவர்களது




எண்ணங்களாக உள்ளன.

இதேவேளை நடைபெறவுள்ள ஜனாதிபதி தேர்தலில் மும்முனை போட்டி நிலவும் என்ற கருத்து நிலவும் சூழலில் அந்த வேட்பாளர்கள் அரசமைப்பில் உள்ள மாகாண முறைமையை முழுமையாக நடைமுறைப்படுத்த சமிக்ஞையை காட்ட முனைகின்றபோதும் தமிழ் தரப்பு அதனை புகழ்ந்து பேசுவது போன்று வெளிப்படுத்தினாலும் இந்திய வெளிவிவகார அமைச்சரின் முன்னிலையில் பிளவுபட்ட நிலையிலேயே கருத்துக்களை வெளிப்படுத்தியிருந்துள்ளனர்.

இது இந்தியாவின் பங்களிப்பை கோருவது போன்று காட்டிக்கொண்டாலும் எமது அரசியல் பிரச்சினை தொடர்பில் அவர்களிடத்தில் தீர்க்கமான பார்வை ஒன்றும் இல்லாததையே வெளிக்காட்டி நிற்கிறது.

ஆயினும், நீண்ட காலமாக எமது ஈழ மக்கள் ஜன நாயகக் கட்சி வலியுறுத்திவருகின்ற 13ஆவது அரசமைப்பின் மாகாண முறைமை ஏற்கனவே நடைமுறையில் உள்ளது. அதனை ஆரம்பமாக வைத்து முழுமையாக செயற்படுத்த வேண்டும் என்பதே தற்போதுள்ள நிலைமையில் பொருத்தமாக அமையும்.

எனவே, பிளவுபட்டுள்ள நிலையில் உள்ள நாடாளுமன்றத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் தமிழ் கட்சிகள் மக்களின் நலனிலிருந்து சிந்திக்க வேண்டும். கிடைக்கின்ற வாய்ப்புக்களை எமது மக்களின் நலனுக்காகப் பயன்படுத்திக்கொள்ள வேண்டும்.

அத்துடன் அரசமைப்பில் இருக்கின்ற அதிகாரங்களை முழுமையாக நடைமுறைப்படுத்த இணக்கங்கள் கூறப்படுகின்ற நிலையில் இதய சுத்தியுடன் நடைமுறைப்படுத்த நாடாளுமன்றத்தில் அங்கம் வகிக்கின்ற தமிழ் கட்சிகள் அர்ப்பணிப்புடன் பங்காற்றவேண்டும். - என்றார். (05)

# வைத்தியசாலை திருட்டு சந்தேகநபரை அடையாளம் காண்பதற்கு உதவி தேவை

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் நோயாளி ஒருவருடன் சகஜமாக பேசி, அவருடைய மோதிரம் மற்றும் சிறுதொகைப்பணம், கைப்பை போன்றவற்றை கொள்ளையடித்துச் சென்ற சந்தேக நபர் சிசிரிவி கமராவின் மூலம் அடையாளம் காணப்பட்டுள்ளார் உள வைத்தியசாலை பணிப்பாளர் தெரிவித்துள்ளார்.

இந்த சந்தேக நபர் தொடர்பாக விவரம் தெரிந்தால் யாழ்ப்பாணம் பொலிஸாருக்கோ வைத்தியசாலை நிர்வாகத்துக்கோ தெரிவிக்குமாறு பொதுமக்களுக்கு அவர் அறிவித்துள்ளார்.

யாழ். போதனா வைத்தியசாலையில் வெளிக்கிழமை நோயாளர்களின் பார்வையாளர் நேரத்திலேயே நூதனமான முறையில் இந்த திருட்டுச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இந்த நோயாளி கடந்த 19 ஆம் திகதி சத்திர சிகிச்சை விடுதியில் சேர்க்கப்பட்டுள்ளார்.

இந்நிலையில், வைத்தியசாலைக்கு சேர்க்கப்படும் நோயாளிகள் தங்க ஆபரணங்களையோ பெறுமதியான பொருள்களையோ கொண்டு வரவேண்டாம் எனவும் தெரியாத நபர்களுடன் அவதானமாக இருக்கவேண்டும் எனவும் அறிவுறுத்தப்படுகிறது. (05)





காலைக்கதிர் Kalaikkathir



காலைக்கதிர் Kalaikkathir

# வைத்தியர்கள் பலர் நாட்டைவிட்டு வெளியேற தயாராகுகின்றனராம்

## அரச வைத்திய அதிகாரிகள் சங்கம் தகவல்

பொருளாதார நெருக்கடியால் மூளைச் சலவைக்கு உள்ளாகும் வைத்தியர்களில் 25 சதவீதமானவர்கள் நாட்டை விட்டு வெளியேற தயாராகவுள்ளனர் என அரசாங்க வைத்திய அதிகாரிகள் சங்கம் தெரிவித்துள்ளது.

கடந்த 2022 மற்றும் 2023 ஆகிய இரண்டு ஆண்டுகளில் 1,800 இற்கும் மேற்பட்ட வைத்தியர்கள் நாட்டை விட்டு வெளியேறியுள்ளனர் என அரச வைத்திய அதிகாரிகள் சங்கத்தின் பேச்சாளர் சம்மில் விஜேசிங்க அரபு ஊடகமொன்றுக்கு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளவை வருமாறு -

இலங்கையில் 2021 ஆம் ஆண்டில் கொரோனா வைரஸ் தொற்றை தொடர்ந்து மோசமான பொருளாதார நெருக்கடி ஏற்படுவதற்கு முன்னர் சராசரியாக 200 வைத்தியர்கள் நாட்டை விட்டு வெளியேறியுள்ளனர் என சுகாதார அமைச்சின் புள்ளிவிவரங்கள் தெரிவிக்கின்றன.

தற்போது அரசாங்க வைத்தியசாலைகளில் பணியாற்றும் குறைந்தது 25 சதவீதமான வைத்தியர்கள் வெளிநாட்டில் வேலை பெற்றுக் கொள்வதற்கான பரீட்சைகளில் சித்தியடைந்துள்ளதாக அரச வைத்திய அதிகாரிகள் சங்கத்தின் தரவுகள் காட்டுவதால் இன்னும் பலர் அவர்களை பின்பற்ற வாய்ப்புள்ளது.

ஐக்கிய அரபு எமிரேட்ஸ் அல்லது ஓமான் நாடுகளில் வைத்திய துறையில் ஈடுபட வைத்தியர்களுக்கான பிரத்தியேகமான பரீட்சைக்கு தோற்ற வேண்டும்.

இங்கிலாந்தில் வைத்திய துறையில் ஈடுபட தொழில்முறை மற்றும் மொழியியல் மதிப்பீட்டு குழுமத்தின் பரீட்சைக்கு தோற்றவேண்டும். ஆஸ்திரேலியாவில் அவர்கள் ஆஸ்திரேலிய மருத்துவ சபையின் பரீட்சைக்கு தோற்றவேண்டும் எனத் தெரிவித்துள்ளார்.

(05)





# பஸ் – ஓட்டோ மோதிய விபத்து தாய், மகள் சாவு தந்தை காயம்

மாத்தளை, பலாபத்வல பிரதேசத்தில் இடம்பெற்ற விபத்தில் தாய் மற்றும் மகள் உயிரிழந்துள்ளதுடன் தந்தை படுகாயமடைந்துள்ளார் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த விபத்து சனிக்கிழமை இடம்பெற்றுள்ளது.

தம்புள்ளையிலிருந்து கண்டி நோக்கிப் பயணித்த பஸ் ஒன்று வத்தேகமையிலிருந்து அநுராதபுரம் நோக்கிப் பயணித்த ஓட்டோ ஒன்றுடன் நேருக்கு நேர் மோதியதில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

விபத்தின் போது ஓட்டோவில் பயணித்த தாய், தந்தை மற்றும் மகள் படுகாயமடைந்துள்ள நிலையில் மாத்தளை மாவட்ட பொது வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட பின்னர் தாய் மற்றும் மகள் உயிரிழந்துள்ளனர் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

தம்மிக்கா பத்மினி என்ற 54 வயதுடைய தாயாரும் சச்சினி தாரக்கா என்ற 17 வயதுடைய மகளுமே இவ்வாறு உயிரிழந்துள்ளனர்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை மாத்தளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

(05)

# பொகவந்தலாவையில் சட்டவிரோத மதுபானம் விற்பனை ஒருவர் கைது



*பொகவந்தலாவை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் உள்ள வீடொன்றில் அனுமதிப்பத்திரம் இன்றி சட்டவிரோதமாக மதுபானம் விற்பனை செய்த சந்தேக நபரொருவர் கைது செய்யப்பட்டுள்ளார் என பொலிஸார் தெரிவித்தனர்.*

*பொலிஸாருக்கு கிடைத்த தகவலின் பேரில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பில் சந்தேக நபர் கைது செய்யப்பட்டுள்ளார்.*

*சந்தேக நபரிடமிருந்து 47 மதுபான போத்தல்கள் கைப்பற்றப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.*

*சந்தேக நபர் பொலிஸ் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ள நிலையில் சந்தேக நபரை எதிர்வரும் 25 ஆம் திகதி ஹற்றன் நீதிவான் நீதிமன்றில் ஆஜராகுமாறு பொலிஸார் தெரிவித்துள்ளனர்.*

*இது தொடர்பான மேலதிக விசாரணைகளை பொகவந்தலாவை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (05)*

குறிஞ்சி மலை நகர் Kurinchi Hill City
கொழும்பு - மட்டக்களப்பு A4 வீதியில் 190 ஆவது km இல் 800 m தூரத்தில்
பதுளை மாவட்டம் ஹல்துமுல்லை பிரதேச செயலர் பிரிவு
15 பேர்ச் முதல் 40 பேர்ச் வரையான காணித்துண்டுகள் விற்பனைக்கு!
சுற்றுலா விடுதி, விடுமுறை வீடு ஆகியவற்றுடன் தேயிலை, கோப்பி, கறுவா பயிர்ச்செய்கையும்

அருகில் உள்ள சுற்றுலா மையங்கள்
(100கிமீ சுற்றுவட்டாரத்தில்)
பம்பரகந்த, தியலும, துன்கிந்த, இராவணா, ரம்போடை உட்பட 10இற்கும் மேற்பட்ட நீர்வீழ்ச்சிகள்
தேசிய சரணாலயங்கள் மற்றும் பூங்காக்கள்
Horton Plains National Park, Hakgala Botanical Gardens
Victoria Park, Kande Ela Educational Forest Park
Lunugamvehera National Park, Yala National Park
Udawalawe National Park
கதிர்காமம் முருகன் கோவில், சீதா அம்மன் ஆலயம், ரம்போடை ஆஞ்சனேயர் கோவில்

தொடர்புகளுக்கு: 0777 43 5557
தனியான வாகன தரிப்பிட வசதி
முழுமையான 24 மணிநேர பாதுகாப்பு சேவை
தொடர்ச்சியான பராமரிப்பு ஏற்பாடு
மின்சார இணைப்பு ஏற்பாடு - குடிதண்ணீர் வசதி
உணவகம் - உள்ளக விளையாட்டுத்திடல்
தேயிலை, கோப்பி, கறுவா தொழிற்சாலைகள்
சுற்றுலா ஏற்பாடுகள்
பேர்ச் 250,000/-
பரப்பு 25 இலட்சம்
5th Project
இது ஒரு கற்பகவனம் செயற்திட்டம்
Good Gift Property Developers (Pvt) Ltd


காலைக்கதிர் Kalaikkathir

## அதானியின்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மெகாவோல்ட் மின்னுற்பத்திக்கான ஏல விவரங்களும் ஆணைக் குழுவிற்கு கிடைக்கவில்லை என்றும் குறித்த செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மன்னார் மற்றும் பூநகரி பகுதிகளில் காற்றாலை மின்திட்டத்தினை முன்னெடுப்பதற்கான அடிப்படைகள் தொடர்பான தகவல்களும் பொதுப்பயன்பாடுகள் ஆணைக்குழுவிற்கு வழங்கப்படவில்லை என்றும் அச்செய்தியில் கூறப்பட்டுள்ளது.

இந்தத் திட்டத்தால் ஏற்படும் சுற்றுச்சூழல் பாதிப்பு தொடர்பான மதிப்பீட்டு அறிக்கையும், மத்திய சுற்றாடல் அதிகாரசபையினால் வழங்கப்பட்ட அனுமதிப்பத்திரத்துக்கான அறிக்கையும் கூட ஆணைக்குழுவிற்கு வழங்கப்பட வில்லை என்றும் அச்செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## தேர்தலை....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நாட்டில் ஜனநாயகத்துக்கு எதிராக முன்னெடுக்கப்படும் செயற்பாடாகவே நாம் கருதுகின்றோம். அதுமட்டுமன்றி ரணிலின் உண்மையான நிலைப்பாடு தேர்தலை நடத்தாது இருப்பதாகும். அதனால்தான் ரங்கே பண்டாரவைப் பயன்படுத்தி தேர்தல் ஒத்திவைப்பு கதையைக் கூறிநாடிபிடித்துப்பார்த்தார். ஆனால் அவர் முயற்சிக்கும் அனைத்துச் செயற்பாடுகளும் தோல்வியே கண்கின்றன என்றார்.

## தொழில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அம்பாறை நிகழ்வினை ஆரம்பித்து வைத்து உரையாற்றிய அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:

100,000 தொழில் முயற்சியாளர்களுக்கு முதல் சுயதொழில் உதவியாக 50,000 ரூபா வழங்கும் வேலைத்திட்டத்தை ஆரம்பிக்கவுள்ளோம். டி.எஸ்.சேனநாயக்க 1949 இல், சுதந்திர இலங்கையின் முதலாவது அபிவிருத்தித் திட்டமான கல் ஓயா வேலைத்திட்டம் இங்கு ஆரம்பிக்கப்பட்டது. இங்கு மின்னேரியா குளத்தை கட்டிய மஹாசேன் மன்னன் நீர்ப்பாசன கலாச்சாரத்திற்கான தனது பங்களிப்பால் கடவுளாக மாறினார். அதனால் தான் அம்பாறை மக்கள் டி.எஸ்.சேனநாயக்காவை கடவுளாகக் கருதிய போது, ஜேவிபி தோழர்கள் அக்காலத்தில் எதிர்த்தார்கள்

ஜே.வி.பி. சகோதரர்கள் இன்னும் அப்படியே இருக்கிறார்கள். சந்திரிகாவின் காலத்தில் மோனாஷ் பல்கலைக்கழகம் இலங்கைக்கு வருவதை நிறுத்தினார்கள். அந்த பல்கலைக்கழகம் தற்போது மலேசியாவில் செயற்பட்டு வருகிறது. இது இன்று அவர்களின் பொருளாதாரத்திற்கு ஆண்டுதோறும் 400 பில்லியன் டாலர்களை பெற்றுக் கொடுக்கின்றது. நாட்டின் அனைத்து திட்டங்களும் இந்த சிக்கலை எதிர்கொள்ள வேண்டியிருந்தது.

நாட்டைக்கட்டியெழுப்புவதற்கான உற்பத்திப் பொருளாதாரத்துக்காக 1948--49 மறைந்த டி.எஸ் சேனாநாயக்கவால். லட்சக்கணக்கான ஏக்கரில் கரும்பு பயிரிடப்பட்டது. நீர்த்தேக்கங்கள் கட்டப்பட்டன. சுற்றுலாத்துறையை மேம்படுத்த வேண்டும். எலோன் மஸ்க் போன்ற தொழிலதிபர்களை இலங்கைக்கு அழைத்து வர வேண்டும்.

வரலாற்றின் ஆரம்பத்திலிருந்து இருந்து வேலை செய்யும் போது அபிவிருத்தி திட்டங்கள் எதிர்க்கப்பட்டன. இந்த நாடு முன்னேற முடியுமா? மலேசியா, சிங்கப்பூர், ஐக்கிய அரபு அமீரகம், துபாய், வியட்நாம், சீனா போன்ற நாடுகளில் பலகைப் போராட்டங்கள் நடக்கின்றனவே, போராட்டங்கள் நடந்தவுடன் அந்த நாடுகளில் அபிவிருத்தி திட்டங்கள் நிறுத்தப்பட்டதா? பலகை பிடித்தவர்களையும், தெருக்களில் கூச்சலிடுபவர்களையும் அவர்கள் விரும்பியவாறு நாடுகள் அபிவிருத்தி செய்யவில்லை. ஏனெனில் நாட்டு மக்களுக்குஎன்னசெய்யவேண்டும் என்பதில் துணிச்சலான முடிவுகளை ஜனாதிபதி ரணில் எடுத்தார்.

இன்று நாம் அதைப் பற்றி சிந்தித்து இந்த பிள்ளைகளின் எதிர்காலத்தைப் பாதுகாக்க விரும்புகிறோம். நாம் புதியதோர் சமுதாயத்தை உருவாக்க முன்வர வேண்டும். புனித பொசன் தினத்தில் இருக்கும் நாம், வங்குரோத்து அடைந்த நாட்டில் இருந்து மீண்டது போன்று கட்சி நிறத்திற்காக மீண்டும் அந்தவங்குரோத்துநிலைஏற்படாமல் இருக்க பிரார்த்தனை செய்வோம் என்றார்.

## ஜூன் 26....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கருதுவதற்கு தீர்மானித்துள்ளன. இந்த நிலைமையை ஏற்படுத்தியவர் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவே.

அவர் எதிர்வரும் புதன்கிழமை 26ஆம் திகதி விசேட உரையாற்றவுள்ளார். அத்தோடு அவர் அடுத்து வரும் ஜனாதிபதி தேர்தலில் சுயாதீன வேட்பாளராக போட்டியிடவுள்ளார். அது உறுதியான விடயம் என்றார்.



## நிலக்கடலை....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மடிக்கணினிகளும் வழங்கப்பட்டன. இந்திய விவசாயிகள் இந்த செயற்பாடுகளை தங்கள் கை தொலைபேசியின் மூலம் முகாமைத்துவம் செய்கின்றனர்.

அரசின் காணிகளில் விவசாயம்செய்துவந்தவர்களுக்கு நிரந்தர காணி உறுதிகளை வழங்கியிருக்கிறோம். நேற்றைய தினம் மட்டக்களப்பு மாவட்டத்திலும் காணி உறுதிகள் வழங்கப்பட்டன. அதனால்உங்களுக்குகாணிஉறுதி கிடைத்துள்ளது. அதனால் நீங்கள் பெருமிதம் கொள்ள வேண்டும்.

நாடளாவிய ரீதியில் விவசாய நவீனமயமாக்கல் வேலைத் திட்டத்தை ஆரம்பித்துள்ளோம். விவசாய அமைச்சும் மாகாண விவசாயஅமைச்சுகளும்இணைந்து இந்த வேலைத் திட்டத்தை நடைமுறைப்படுத்தும்.

அடுத்த வருடத்திற்குள் அனைத்து விவசாய சேவை நிலையங்களையும் விவசாய நவீனமயமாக்கல் நிலையங்களாக மாற்ற திட்டமிடப்பட்டுள்ளது. இதன் மூலம், இந்நாட்டு விவசாயிகளின் வருமானத்தை படிப்படியாக அதிகரித்து, கிராமப் பகுதிகளும் வளர்ச்சியை எட்டும்.

அதற்காக மட்டக்களப்பு மாவட்டத்தில் பெரும் வேலைத் திட்டமொன்றைசெயற்படுத்ததிட்டமிட்டுள்ளோம். மகாவலி ஏ - பி வலயங்கள் உள்ளிட்ட பிரதேசங்களில் விவசாயத்தை மேம்படுத்த எதிர்பார்த்துள்ளோம். அதன் மூலம் அப்பகுதி விவசாயம் முழுமையாக வளர்ச்சி அடையும் என்றார்.

## தமிழ் அரசு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கலநாதன் தெரிவித்தார்.

தமிழ் ஈழ விடுதலை இயக்கத்தின் மறைந்த தலைவர் அடலேறு சிறி சபாரத்தினத்தின் திருவுருவச்சிலை வவுனியாவில் மணிக்கூட்டு கோபுரத்திற்கு அருகாமையில் திறந்து வைக்கப் பட்டதன் பின்னர் செய்தியாளர்களிடம் அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர்மேலும்தெரிவித்ததாவது:

ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடுவதற்குத்தீர்மானித்துள்ளதாக அறிவித்துள்ள தென்னிலங்கைத் தலைவர்கள் யாரும் எம்முடன் பேச்சு நடத்தவில்லை. அவர்கள் தற்போதைய நிலையில் தமிழரசுக்கட்சியுடனும், விக்னேஸ்வரனுடம்பேச்சுக்களை நடத்தியுள்ளார்கள்.

இவ்வாறான நிலையில் எமது இயக்கம்தமிழ்பொதுவேட்பாளரை ஆதரிப்பதென தீர்மானம் எடுத்து அறிவித்துள்ளது. இந்த தீர்மானத்துடன் தமிழரசுக்கட்சி, தமிழ் காங்கிரஸ் உள்ளிட்ட அனைத்து தரப்பினரும் ஒருங்கிணைய வேண்டும் என்று விரும்புகின்றோம்.

அனைவரும் ஒன்றிணைந்து தமிழ் பொதுவேட்பாளரை ஆதரிப்பதன் ஊடாகவே தமிழ் மக்களின் சக்தியை வெளிப்படுத்த முடியும். அதற்காக அனைவரிடத்திலும் நாம் ஆதரவினை வழங்குமாறு கேட்டுக்கொள்கின்றோம் என்றார்.

காலைக்கதிர்
ஆசிரியர்பீட
தொடர்புகளுக்கு
076 3983858
மின்னஞ்சல் முகவரி:
kalaikkathirnews@gmail.com




காலைக்கதிர் Kalaikkathir

# பிரதான கட்சிகளின் பொது வேட்பாளராக ரணில் மூடிய அறைக்குள் ஜெய்சங்கரிடம் அவர் உறுதி

## புதனன்று நாட்டு மக்களுக்கு அறிவிப்பார் ஜனாதிபதி

உத்தேச ஜனாதிபதி தேர்தலில் பிரதான கட்சிகள் ஒன்றிணைந்து உருவாக்கும் கூட்டணியில் பொது வேட்பாளராக போட்டியிட உள்ளார் எனவும், தேர்தல் குறித்த அறிவிப்புக்கு பின்னர் மேலும் சாதகமான பல மாற்றங்கள் தேசிய அரசியலில் இடம்பெறும் என்றும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க குறிப்பிட்டுள்ளார்.

இலங்கைக்கு விஜயம் மேற்கொண்டிருந்த இந்திய வெளிவிவகார அமைச்சர் எஸ். ஜெய்சங்கருக்கும் ஜனாதிபதிக்கும் இடையில் விசேட பிரத்தியேக சந்திப்பு ஒன்று இடம்பெற்றது. இதன் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.



இதேவேளை எதிர்வரும் 26 ஆம் திகதி புதன்கிழமை நாட்டு மக்களுக்கு விசேட உரை நிகழ்த்த உள்ள ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, நாட்டின் பொருளாதார சாதக தன்மைகள் குறித்து தெளிவுபடுத்த உள்ளார். இதன் போது ஜனாதிபதி தேர்தல் தொடர்பிலும் பெரும்பாலும் கூறப்படலாம் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

இந்திய தேர்தலில் பாரதிய ஜனதா கட்சி தலைமையிலான கூட்டணி வெற்றி பெற்று மூன்றாவது முறையாக ஆட்சியமைத்துள்ள நிலையில் வெளிவிவகார அமைச்சராக எஸ்.ஜெய்சங்கர் மீண்டும் நியமிக்கப்பட்டுள்ளார்.

பிரதமர் மோடியின் பதவியேற்பு நிகழ்வில் கலந்துகொண்ட ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை டெல்லியில் சந்தித்து வழங்கிய உறுதிமொழியின் பிரகாரம் கலாநிதி எஸ். ஜெய்சங்கர் வெளிவிவகார அமைச்சராக பதவியேற்று முதலாவது விஜயமாக கடந்த வியாழக்கிழமை கொழும்பை வந்தடைந்தார்.

இந்த விஜயத்தின் போது பிரதமர் மோடியின் விசேட செய்தியுடனேயே இந்திய வெளிவிவகார அமைச்சர் எஸ்.ஜெய்சங்கர் இலங்கைக்கு வந்திருந்தார். இதன் போது ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மற்றும் பிரதமர் உட்பட அரசாங்கத்தின் முக்கியஸ்தர்களை இராஜதந்திர வழிமுறைகளுக்கு அமைய சந்தித்துக் கலந்துரையாடினார்.

இதேவேளை எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாஸ உட்பட வடக்கு, கிழக்கு மற்றும் மலையகத்தை பிரதிநிதித்துவம் செய்கின்ற தமிழ் அரசியல் பிரதிநிதிகளையும் சந்தித்திருந்தார்.

இவ்வாறானதொரு நிலையில், இரு தரப்பு கலந்துரையாடலுக்கு அப்பால் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மற்றும் இந்திய வெளிவிவகார அமைச்சர் எஸ்.ஜெய்சங்கர் ஆகிய இருவருக்கிடையில் மாத்திரம் பிரத்தியேகமான விசேட சந்திப்பு ஒன்றும் இடம்பெற்றுள்ளது.

இதன் போது உத்தேச தேர்தல்கள் மற்றும் நாட்டின் அரசியல் - பொருளாதார ஸ்தீரதன்மைக்கான முன்னெடுப்புகள் உள்ளிட்ட பல விடயங்கள் குறித்து பேசப்பட்டுள்ளது. குறிப்பாக உத்தேச ஜனாதிபதி தேர்தலை இலக்கு வைத்து உருவாக்கப்படும் கூட்டணியின் முன்னேற்றங்கள் குறித்து இந்திய வெளிவிவகார அமைச்சர் ஜெய்சங்கர் வினவியுள்ளார்.

பிரதான கட்சிகள் ஒன்றிணைந்து நம்பிக்கைக்குறிய வகையில் வலுவான கூட்டணியை உருவாக்கியுள்ளன. அந்த கூட்டணியில் பொது வேட்பாளராகத் தான் போட்டியிட உள்ளதாக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இந்த சந்திப்பின் போது இந்திய வெளிவிவகார அமைச்சர் எஸ்.ஜெய்சங்கரிடம் குறிப்பிட்டுள்ளதுடன், ஜனாதிபதி தேர்தல் தொடர்பிலான உத்தியோகப்பூர்வ அறிவிப்புடன், மேலும் சாதகமான பல மாற்றங்கள் ஏற்படும் என்று தெரிவித்துள்ளார். இதனை தொடர்ந்து பிரதமர் மோடியின் இலங்கை விஜயம் உள்ளிட்ட விடயங்கள் தொடர்பாக இந்திய அமைச்சர் தெளிவுப்படுத்தியுள்ளார்.

இவ்வாறானதொரு நிலையில் எதிர்வரும் 26 ஆம் திகதி புதன்கிழமை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நாட்டு மக்களுக்கு விசேட அறிவிப்பை விடுக்க உள்ளார். இந்த அறிவிப்பில் சர்வதேச நாணய நிதியத்துடனான முன்னெடுப்புகளில் உள்ள பன்னாட்டு கடன் வழங்குனர்களுடன் ஒப்பந்தம் கைச்சாத்திட்டுள்ளமையை அறிவிக்க உள்ளார்.

இலங்கையின் கடன் மேலாண்மை வசதிகளில் சர்வதேசத்தின் ஒத்துழைப்புகளை அரசாங்கம் கோரியுள்ள நிலையில், இந்தியா மற்றும் ஜப்பான் உள்ளிட்ட நாடுகள் முழுமையான ஒத்துழைப்புகளுக்கு உறுதியளித்துள்ளன.

குறிப்பாக சர்வதேச கடன் வழங்குநர்களுடனான ஒப்பந்தம் இருநாள்களுக்குள் கைச்சாத்திடப்பட உள்ளது. இந்தத் தகவலையும், இரண்டு ஆண்டுகள் என்ற குறுகிய காலத்திற்குள் நாடு அடைந்த பொருளாதார வெற்றிகளையும் நாட்டு மக்களுக்கு கூறவுள்ள ஜனாதிபதி ரணில், ஜனாதிபதி தேர்தல் குறித்தும் தெரியப்படுத்த வாய்ப்புகள் உள்ளமை குறிப்பிடத்தக்கது. (05)

# மாவடி பேர்ல்ஸ் விளையாட்டுக் கழகத்தின் சாதனையாளர் கௌரவிப்பும், வர்ண இரவும்







காரைதீவு பிரதேச மாவடிபள்ளியிலிருந்து பல்கலைக்கழக அனுமதி பெற தகுதியானவர்கள், சாதனையாளர்கள் கௌரவிப்பும், மாவடிப்பள்ளி பிரிமியர் லீக் சுற்றுத்தொடரின் தொடக்க விழாவும் மாவடி பேர்ல்ஸ் விளையாட்டுக் கழகத்தின் ஏற்பாட்டில் கழகத் தலைவரும், சம்மாந்துறை வலயக்கல்வி அலுவலக இஸ்லாம் பாட வளவாளருமான மௌலவி ஏ.ஜே.எம். அஸ்ரப் தலைமையில் வெள்ளிக்கிழமை இரவு மாவடிப்பள்ளி அஸ்ரப் மகா வித்தியாலய திறந்தவெளி அரங்கில் நடைபெற்றது.

அதி திறமை சித்திகளைப் பெற்று பல்கலைக்கழக அனுமதிக்கு தகுதி பெற்ற மாணவர்கள் மற்றும் அவர்களது பெற்றோர்கள் அதிதிகளால் நினைவுச் சின்னம் வழங்கி கௌரவிக்கப்பட்டதுடன் மாவடிப்பள்ளி பிரிமியர் லீக் சுற்றுத்தொடரின் நான்கு அணிகளும் அறிமுகம் செய்து வைக்கப்பட்டன.

இந்நிகழ்வில் மயோன் குஷரூப் நிறுவன முகாமைத்துவ பணிப்பாளரும், ரிஸ்லி கல்வி மைய தலைவருமான அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் அம்பாறை மாவட்ட இளைஞர் அமைப்பாளர் ரிஸ்லி முஸ்தபா பிரதம அதிதியாகக் கலந்து கொண்டதுடன் சாய்ந்தமருது அல்- ஜலால் வித்தியாலய அதிபர் எம்.ஐ.எம். சைபுதீன், மாவடிப்பள்ளி அஸ்ரப் மகா வித்தியாலய அதிபர் வீ.எம். ஸம்ஸம், அல்- ஜலால் வித்தியாலய பிரதி அதிபர் ஏ.எல். ரஜாப்தீன், கிழக்கு மாகாண கூட்டுறவு ஊழியர்கள் ஆணைக்குழு உறுப்பினர் யூ.எல். என். ஹுதா உமர், அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் மற்றும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் மாவடிப்பள்ளி அமைப்பாளர்கள், அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகள், விளையாட்டு கழகங்களின் நிர்வாகிகள், தொழிலதிபர்கள், பிரமுகர்கள் பலரும் அதிதிகளாகக் கலந்து கொண்டனர். (05)

# ஐஸ் போதைப் பொருள் வைத்திருந்த கொழும்புவாசி கல்முனையில் கைது

ஐஸ் போதைப்பொருளை வைத்திருந்த சந்தேக நபரை விசேட அதிரடிப்படையினர்கைது செய்து மேலதிக சட்ட நடவடிக்கைக்காக கல்முனை தலைமையக பொலிஸாரிடம் ஒப்படைத்துள்ளனர்.

கல்முனை விசேட அதிரடிப்படை முகாமுக்கு கிடைக்கப்பெற்ற இரகசிய தகவலின் அடிப்படையில் அம்பாறை மாவட்டம் கல்முனை மாநகர பகுதியில் உள்ள பிரபல உல்லாச விடுதிக்கருகில் சந்தேக நபர் கைது செய்யப்பட்டார்.

கைதான நபர் கொழும்பு புற நகர் பகுதியை சேர்ந்த 47 வயதுடையவர் என்பதுடன் சந்தேக நபரிடமிருந்து 25 கிராம் 150 மில்லிகிராம் ஐஸ் போதைப்பொருள் விசேட அதிரடிப்படையினரால் கைப்பற்றப்பட்டுள்ளது.

கைப்பற்றப்பட்ட போதைப்பொருளோடு சந்தேக நபர் கல்முனை தலைமையக பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளதுடன், விசேட அதிரடிப்படையினர் மேலதிக விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர். (05)

# நிர்ணய விலைக்கு எமது நெல்லை அரசு கொள்வனவு செய்யவேண்டும்

## கிளிநொச்சி விவசாயிகள் கோரிக்கை



அரசாங்கம் உரிய நேரத்தில் நெல்லை கொள்வனவு செய்ய தவறுகின்ற நேரத்தில் அதனை பயன்படுத்தி தனியார் மிகக்குறைந்த நெல்லை கொள்வனவு செய்வதால் தமது வாழ்வாதாரம் பாதிக்கப்படுவதாக கிளிநொச்சி விவசாயிகள் தெரிவிக்கின்றனர்.

கிளிநொச்சி மேற்கு நீர்ப்பாசன திணைக்களத்தின் கீழுள்ள குடமுருட்டி குளத்தின் கீழ் 340 ஏக்கர் நிலப்பரப்பில் சிறுபோக நெற்செய்கை மேற்கொண்ட நிலையில் தற்போது அறுவடை ஆரம்பிக்கப்பட்டிருக்கின்றது. அறுவடை ஆரம்பிக்கப்பட்ட நிலையில் விவசாயிகள் அரசாங்கம் நெல்லைக் கொள்வனவு செய்யாமையால் தனியாருக்குக் குறைந்த விலையில் விற்பனை செய்ய வேண்டிய நிலையுள்ளதாக விவசாயிகள் தெரிவிக்கின்றனர். தமது நெல்லுக்கு நிர்ணய விலையில் அரசாங்கம் கொள்வனவு செய்ய வேண்டும் என விவசாயிகள் கோரிக்கை விடுக்கின்றனர். போதிய விலைச்சலும் குறைவாக காணப்படுவதாகவும் தற்போது ஒரு மூடை 6500 ஷரூபாவுக்கு விற்பனை செய்யமுடிவதாக தெரிவிக்கின்றனர். (05 - 113)

காலைக்கதிர் Kalaikkathir

# 1992 எடுக்கப்பட்டதும் 2007 பிரிக்கப்பட்டதும் இணைத்து எமக்கு கிடைக்கப்பெறவேண்டும்

## ஈ.பி.டி.பி ஊடக பேச்சாளர் சிறீரங்கேஸ்வரன் தெரிவிப்பு

1992 இல் எடுக்கப்பட்டதும் 2007 இல் பிரிக கப்பட்டதும் இணைத்து கிடைக்கப்பெற வேண்டும் என்பதே எமது எதிர்பார்ப்பாக உள்ளதென என ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் ஊடக பேச்சாளர் ஜயாத்துரை சிறீரங்கேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற ஊடக சந்திப்பின்போது ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடும் சஜித் பிரேமதாஸ, பொலிஸ் அதிகாரம் மற்றும் காணி அதிகாரங்களைத் தருவதாகக் கூறியிருப்பதாக செய்திகள் வெளியாகியுள்ளன. இது தொடர்பில் தங்களின் கருத்து என்ன என ஊடகவியாளர்கள் எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்திருந்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறுகையில் -

ஈழ விடுதலை போராட்டம் ஆரப்பிக்கப்பட்டதன் பின்னர் தமிழர்களது அரசியல் உரிமை பிரச்சினை தொடர்பாக பூட்டான் திம்பு பேச்சு, வட்டமேசை மாநாடு, என பல்வேறு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டிருந்தாலும் 1987 ஆம் ஆண்டு 'வடமராட்சி ஒப்பரேசன் லிபரேசன்' இராணுவ நடவடிக்கையின் ஊடாக வடமராட்சி பிரதேசம் படையினரால் மீட்கப்பட்டது.

அதைத் தொடர்ந்து இந்தியாவின் உணவுக் கப்பல்கள் துயர்துடைப்பு பொருள்களை ஏற்றிக்கொண்டு இலங்கை நோக்கி பயணத்தை மேற கொண்டது. ஆனால் இலங்கைக் கடற்படையினரால் அக் கப்பல்கள் திருப்பி அனுப்பப்பட்டன.

அதனையடுத்து இந்தியாவிலிருந்து மிராஜ் யுத்த விமானங்கள் யாழ் குடாநாட்டின்மீது உணவுப் பொருள்களை பரசூட் மூலம் போட்டுச் சென்றன. இதன்பின்னர் அன்றை அரசு இந்திய இலங்கை ஒப்பந்தத்தை கைச்சாத்திட இலங்கை அரசு ஒப்புக்கொண்டது.

அதனடிப்படையில் 1987 ஆம் ஆண்டு ஜூலை 29 ஆம் திகதி ராஜீவ் - ஜே. ஆர் ஒப்பந்தம் ஏற்படுத்தப்பட்டது. இதில் 13 ஆவது அரசமைப்பு திருத்தத்தில் மாகாண ஆட்சி முறைமை கொண்டுவரப்பட்டது.

ஆயினும் ஒப்பந்தம் செய்யப்பட்ட நாளிலிருந்து ஒரு வருடத்துக்குள் சர்வஜன வாக்கெடுப்பின் மூலம் அது அங்கீகரிக்கப்பட வேண்டும் என்ற சரத்தும் ஒப்பந்தத்தில் உள்ளடக்கப்பட்டிருந்தது. ஆனால் புலிகள் இயக்கமும் பிரேமதாஸ அரசும் இணைந்து சர்வஜன வாக்கெடுப்பு நடைபெறவி டாது தடுத்தனர். இதன்பின்னர் இந்தியாவில் ஏற்பட்ட ஆட்சி மாற்றத்தைத் தொடர்ந்து இந்திய அமைதிகாக்கும் படை இலங்கையிலிருந்து வெளியேறியது.

அதைத்தொடர்ந்து 1992 ஆம் அண்டு இன்றைய எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாஸவின் தகப்பனார் ரணசிங்க பிரேமதாஸ 1992 ஆம் ஆண்டின் 58 ஆம் இலக்க சட்டத்தின் மூலம் மாகாணங்களுக்கு வழங்கப்பட்டிருந்த முக்கிய அம்சங்களை மத்திய அரசின் கீழ் தனக்கிருந்த அதிகாரங்களைக் கொண்டு எடுத்துக்கொண்டார்.

இதேபோன்று அனுரகுமார திஸநாயக்கவின் ஜே.வி.பி இயக்கம் 2007 இல் உயர் நீதிமன்றம் ஊடாக தமிழ் தாயக ஒரே நிலப்பரப்பான வடக்கு கிழக்கு இணைப்பை நீக்கினர்.

ஆகவே 1992 இல் எடுக்கப்பட்டதும் 2007 இல் பிரிக்கப்பட்டதும் இணைத்து கிடைக்கப்பெற வேண்டும் என்பதே எமது எதிர்பார்ப்பாக உள்ளெதனவும் அவர் மேலும் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (05)

# இலங்கை கடற்படைக்கு 1.2 மில்லியன் அமெரிக்க டொலர் உதிரிப்பாகங்களை வழங்கியது இந்தியக் கப்பல் சாசெட்








இந்திய கடலோர காவல்படையின் ரோந்து கப்பலான சாசெட் இரண்டு நாள் பயணமாக கடந்த 19 ஆம் திகதியன்று கொழும்பை வந்தடைந்த நிலையில் இலங்கையில் இருந்து கடந்த 21 ஆம் திகதி மீண்டும் இந்தியா புறப்பட்டுள்ளது.

இந்தக் கப்பலில் 1.2 மில்லியன் அமெரிக்க டொலர் பெறுமதியான அத்தியாவசிய உதிரி பாகங்கள் இலங்கை கடலோரக் காவல்படையின் கப்பலான சுரக்ஷாவிற்கு இலவசமாகக் கொண்டு வந்துள்ளது. இந்திய கடலோரக் காவல்படையின் கட்டளை அதிகாரி, பிரதி இன்ஸ்பெக்டர் ஜெனரல் ஆர்.ராஜேஷ் நம்பிராஜ், இலங்கை கடற்படையின் மேற்கு கடற்படைத் தளபதி ரியர் அட்மிரல் டி.எஸ். கே.பெரேரா மற்றும் இலங்கை கரையோர கடற்படையின் பணிப்பாளர் நாயகம் ரியர் அட்மிரல் பூஜித விதான ஆகியோரை சந்தித்தார்.

இதன்போது இந்திய கடலோர காவல்படை கப்பலில் கொண்டுவரப்பட்ட உதிரிப் பாகங்கள் ஒப்படைக்கப்பட்டன. இதில் இலங்கைக்கான இந்திய உயர்ஸ்தானிகர் சந்தோஷ் ஜா, இலங்கையின் பாதுகாப்புச் செயலாளர் ஜெனரல் கமல் குணரத்ன (ஓய்வு), கடற்படைத் தளபதி வைஸ் அட்மிரல் பிரியந்த பெரேரா, மேற்கு கடற்படைத் தளபதி ரியர் அட்மிரல் டிஎஸ்கே பெரேரா, இலங்கை கடலோரக் காவல்படையின் பணிப்பாளர் நாயகம் ரியர் அட்மிரல் பூஜித விதான மற்றும் மூத்த இலங்கை கடலோர காவல்படை மற்றும் கடற்படை அதிகாரிகள் கலந்துகொண்டனர்.

எஸ்.எல்.சி.ஜி.எஸ் சுரக்ஷா கப்பலானது கடந்த 2017 ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் இந்திய அரசாங்கத்தால் இலங்கைக்கு நன்கொடையாக வழங்கப்பட்ட ஒரு கடல் ரோந்துக் கப்பலாகும். முன்னதாக ஜூன் 2021 மற்றும் ஏப்ரல் 2022 இல் இந்தியா சுரக்ஷா கப்பலுக்கான உதிரி பாகங்களை நன்கொடையாக வழங்கியது.

ஜனவரி 2024 இல் ஹாலோன் சிலிண்டர்களை மீண்டும் நிரப்புவதற்கான உதவியையும் வழங்கியது. இந்த செயற்பாடானது, பிராந்தியத்தில் கடல்சார் பாதுகாப்பின் பகிரப்பட்ட சவால்களை எதிர்கொள்ளும் திறனை வளர்ப்பதற்கு ஆதரவளிப்பதற்கான இந்தியாவின் உறுதிப்பாட்டை இது அடையாளப்படுத்துகிறது.

இவ்வாண்டின் ஆரம்பத்தில் பெப்ரவரி மற்றும் மார்ச் மாதங்களில் இந்திய கடலோர காவல்படையின் சமர்த் மற்றும் அபினவ் ஆகிய கப்பல்கள் காலி மற்றும் கொழும்புக்கு விஜயம் செய்திருந்தன. இந்திய கடற்படை மற்றும் கடலோர காவல்படை கப்பல்கள் இலங்கைக்கு விஜயம் செய்வது இரு நாடுகளுக்கிடையே நட்புறவு மற்றும் இயங்குநிலையை பலப்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது. இந்தியாவின் பிராந்தியத்தில் உள்ள அனைவருக்கும் பாதுகாப்பு மற்றும் வளர்ச்சி கோட்பாடு மற்றும் அயலவருக்கு முதலிடம் என்ற கொள்கைக்கு இணங்க இந்திய கடற்படைகள் மற்றும் கடலோரக் காவல்படை கப்பல்களின் விஜயங்கள் அமைந்துள்ளன. (05)

# கிளிநொச்சியில் ரூ. 9 லட்சம் பெறுமதியான தங்கம் மீட்பு

கிளிநொச்சி பொலிஸ் பிரிவுக்குப்பட்ட உதயநகர் மேற்கு பகுதியில் வீடு ஒன்றில் நண்பர்களால் களவாடப்பட்ட ஒன்பது லட்சம் ரூபா பெறுமதியான தங்கம் பொலிஸாரால் மீட்கப்பட்டுள்ளது.

உதயநகர் மேற்கு பகுதியில் வீடு ஒன்றுக்கு தனது மகனுடன் நண்பர்கள் இருவர் வீட்டுக்கு வருகை தருவது வளமையான ஒன்றாகும் கடந்த 16 ஆம் திகதி அன்று வீட்டில் வைப்பட்ட நகையை தேடிய போது நகை காணாமல் போயுள்ளது மேலும் தேடியபோது நகையை காணவில்லை என வீட்டின் உரிமையாளர் கடந்த வியாழக்கிழமை கிளிநொச்சி பொலிஸில் முறைப்பாடு செய்ததையடுத்து கிளிநொச்சி பொலிஸார் விரைந்து செயற்பட்டமை அடுத்து களவாடப்பட்ட நகையுடன் யாழ்ப்பாணத்தை சேர்ந்த இரண்டு இளைஞர்கள் கைது செய்யப்பட்டு நகையையும் மீட்டுள்ளார்கள்.

கைது செய்யப்பட்ட இரண்டு இளைஞர்களும் பல தரப்பட்ட குற்றமிழைத தவர்கள் எனத் தெரியவந்துள்ளது குறிப்பிடத்தக்க விடயம்.

இந்தக் களவு தொடர்பாக கிளிநொச்சி குற்றத் தடுப்பு பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகிறார்கள். (05 - 113)

# அநுராதபுரத்தில் வாவியில் மூழ்கி உயிருக்காக போராடியவர் மீட்பு

அநுராதபுரம் பொலிஸ் பிரிவுக்குப்பட்ட பசவக்குளம் வாவியில் மூழ்கி உயிருக்காகப் போராடிக் கொண்டிருந்த இளைஞன் ஒருவர் பொலிஸ் உயிர்காப்பு பிரிவினரால் காப்பாற்றப்பட்டுள்ளார் என அநுராதபுரம் பொலிஸார் தெரிவித்தனர்.

தொலுகந்த, பூஸா பகுதியைச் சேர்ந்த 19 வயதுடைய இளைஞரொருவரே இவ்வாறு காப்பாற்றப்பட்டுள்ளார்.

இவர் பசவக்குளம் வாவியில் நீராடிக்கொண்டிருக்கும் போது திடீரென நீரில் மூழ்கியுள்ள நிலையில் அங்கு கடமையிலிருந்த பொலிஸ் உயிர்காப்பு பிரிவினர் இவரைக் காப்பாற்றியுள்ளனர் என பொலிஸார் தெரிவித்தனர். (05)





# மீ ஓயா பாலத்திற்கு அருகில் லொறி கவிழ்ந்து விபத்து

## இருவர் காயம்

புத்தளம் - அநுராதபுரம் வீதியில் மீ - ஓயா பாலத்திற்கு அருகில் இடம்பெற்ற விபத்தில் இருவர் காயமடைந்துள்ளனர்.

இந்த விபத்து வெள்ளிக்கிழமை இரவு 10.15 மணியளவில் இடம் பெற்றுள்ளது.

சிறிய லொறி ஒன்று வீதியை விட்டு விலகி கவிழ்ந்து விபத்திற்குள்ளாகியுள்ளது.

விபத்தின் போது லொறியில் பயணித்த இருவர் காயமடைந்துள்ள நிலையில் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர். (05)

# திருமலை வைத்தியசாலையில் எரிக்கப்படும் வைத்திய கழிவால் சுற்றுச்சூழலுக்கு மாசா?

*திருகோணமலை வைத்தியசாலையில் எரிக்கப்படுகின்ற வைத்திய கழிவுகளினால் சுற்றுச்சூழல் மாசடைவதோடு மக்களும் பாதிக்கப்படுகின்றனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.*

*திருகோணமலை வைத்திய சாலையின் கழிவுப் பொருள்களை எரிக்கின்ற இயந்திரப் பகுதியின் புகைபோக்கி, ஒரு வருடத்துக்கு மேலாக உடைந்துள்ள நிலையில் அது திருத்தப்படாமல் அப்பகுதியில் வைத்தியசாலைக் கழிவுகள் எரிக்கப்பட்டு வருகின்றன.*

*இந்த இயந்திரத்தினூடாக வெளியேறுகின்ற புகையால் வைத்தியசாலை உட்பட அதனை அண்டிய பகுதிகளிலும் வளி மாசடைவதோடு, வைத்தியசாலையில் உள்ள நோயாளிகள், திருகோணமலை கடற்கரையை நோக்கி வருகின்ற உல்லாச பயணிகள் உட்பட அயலில் உள்ள மக்களும் பாதிக்கப்பட்டு வருகின்றனர்.*

*இப்பகுதியில் வைத்திய சாலையில் இருந்து வெளியேற்றப்படுகின்ற ஆபத்து மிகுந்த மருந்துக்கழிவுகள், சத்திர சிகிச்சையின் மூலம் அகற்றப்படுகின்ற உடற்பாகங்கள், பிளாஸ்டிக் பொருள்கள் போன்றவை நேர அட்டவணையின்றி எரிக்கப்படுவதாகத் தெரியவருகின்றது.*

*ஆரம்பத்தில் இந்த புகை, கிட்டத்தட்ட 60 அடி உயரமான புகைபோக்கியின் மூலம் மேல் வளிமண்டலம் நோக்கி விடுவிக்கப்பட்டிருந்தபோதும் தற்போது 40 அடி உயரமான புகைபோக்கி உடைந்துள்ள நிலையில் அதனை சீர் செய்யாமல் கழிவுப் பொருள்கள் எரிக்கப்பட்டு வருவதால் புகை சூழலில் பரவி வருகிறது.*

*இதன் காரணமாக சுற்றுச்சூழல் பாதிக்கப்பட்டுள்ளதோடு, அந்த புகை மக்களுடைய சுவாசத்திலும் கலக்கிறது. இது தொடர்பாக பலரால் முறைப்பாடுகள் செய்யப்பட்டும் இதுவரை இந்த இயந்திரம் சீர் செய்யப்படவில்லை எனவும் பொதுமக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.*

*(05)*

காலைக்கதிர் Kalaikkathir

# ஜனாதிபதியும் நீதியமைச்சரும் கருத்துக்கள் மூலமாக நீதித்துறைக்கு கடும் அச்சுறுத்தல்

## சட்டத்தரணிகள் ஒன்றிணைவு அமைப்பு காட்டம்

ஜனாதிபதியும் நீதியமைச்சரும் சமீபத்தில் உயர்நீதிமன்றத்திற்கு எதிராக வெளியிட்டுள்ள கருத்துக்கள் நீதித்துறையை அச்சுறுத்தும் தன்மை கொண்டவை என இலங்கை சட்டத்தரணிகள் ஒன்றிணைவு என்ற சட்டத்தரணிகள் அமைப்பு தெரிவித்துள்ளது.

பால்நிலைசமத்துவ சட்டங்கள் தொடர்பில் ஜனாதிபதி ரணில்விக்கிரமசிங்க நீதிமன்றத்தின் தீர்ப்பிற்கு எதிராக தெரிவித்த கருத்துக்களும் நீதியமைச்சர் தெரிவித்த கருத்துக்களும் நீதித்துறையை அச்சுறுத்தும் தன்மை கொண்டவை என சட்டத்தரணிகள் அமைப்பு தெரிவித்துள்ளது.

ஜனாதிபதி, நீதியமைச்சர், கல்வியமைச்சர் ஆகியோர் நிறைவேற்று அதிகாரத்தின் முழுமையான பிரதிநிதிகள் என சட்டத்தரணிகள் அமைப்பு தெரிவித்துள்ளது.

உயர்நீதிமன்றத்திற்கு நீதிபதிகளை நியமிக்கும் முக்கிய அரசமைப்பு அதிகாரம் மற்றும் பொறுப்பை ஜனாதிபதி செயற்படுத்துகின்றார் என சட்டத்தரணிகள் அமைப்பு தெரிவித்துள்ளது. நீதியமைச்சர் நீதித்துறையின் வளங்களைக் கட்டுப்படுத்துகின்றார் எனவும் அந்த அமைப்பு தெரிவித்துள்ளது.

நாடாளுமன்ற சிறப்புரிமையை பயன்படுத்தி உயர்நிறைவேற்று அலுவலகம் நீதித்துறை குறித்து நயவஞ்சகமான கடுமையான கருத்துக்களை வெளியிடுவது தெளிவான அதிகார துஸ்பிரயோகமாகும் எனவும் இலங்கை சட்டத்தரணிகள் அமைப்பு தெரிவித்துள்ளது.

ஆக்கபூர்வமான விமர்சனம் நியாயமான கருத்து மற்றும் கருத்துவேறுபாடுகள் அனைத்தும் கருத்து சுதந்திரத்திற்கான உரிமையின் சரியான வடிவங்கள் எனத் தெரிவித்துள்ள சட்டத்தரணிகள் அமைப்பு, கருத்துவேறுபாடு அச்சுறுத்தலாகவோ மிரட்டலாகவோ மாற முடியாது எனவும் தெரிவித்துள்ளது. தேர்தலிற்கு முன்னர் இவ்வாறான கருத்துக்கள் வெளியாவது அரசியல் ரீதியில் பயனற்றவை எனக் கருதுவதாக தெரிவித்துள்ள சட்டத்தரணிகள் அமைப்பு நீதித்துறை மற்றும் ஜனநாயக செயல்முறைகள் மீது மக்கள் நம்பிக்கை இழக்கச்செய்பவையாக இவை காணப்படுவதாகவும் குறிப்பிட்டுள்ளது.

நீதியமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷவிற்கு எதிராக நீதிமன்றம் உத்தரவை பிறப்பித்துள்ள நிலையில் அவரது கருத்துக்கள் கவலையளிக்கின்றன எனவும் அந்த அமைப்பு தெரிவித்துள்ளது. (05)

# இலங்கைக் கடற்பரப்பில் அத்துமீறி மீன்பிடித்த 18 இந்திய மீனவர் கைது

இலங்கை கடற்பரப்பில் அத்துமீறி மீன்பிடித்த குற்றச்சாட்டில் 18 இந்திய மீனவர்கள் இலங்கை கடற்படையினரால் நேற்று (ஞாயிற்றுக்கிழமை) அதிகாலை கைது செய்யப்பட்டனர்.

யாழ்ப்பாணம் நெடுந்தீவு கடற்பரப்பில் மீன்பிடித்துக் கொண்டிருந்த மூன்று படகுகளையும் அதிலிருந்த 18 இந்திய மீனவர்களையும் கடற்படையினர் கைது செய்தனர்.

கைதானவர்கள் மயிலிட்டி மீன்பிடி துறைமுகத்திற்கு அழைத்துச் செல்லப்படுவதுடன், கடற்றொழில் நீரியல்வளத்துறை திணைக்களத்தினரிடம் ஒப்படைத்து ஊர்காவற்றுறை நீதிமன்றத்தில் முற்படுத்த நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது. (05)

# குடல் அலர்ஜி ஏற்பட்டதில் 15 வயதுச் சிறுவன் சாவு

## யாழில் துயரம்

குடல் அலர்ஜி ஏற்பட்டு 15 வயது சிறுவனொருவன் பரிதாபமாக உயிரிழந்த சம்பவம் சனிக்கிழமை யாழ்ப்பாணத்தில் இடம்பெற்றுள்ளது.

அச்சுவேலி மேற்கு பகுதியைச் சேர்ந்த சிறுவனே உயிரிழந்துள்ளான்.

இச்சம்பவம் குறித்து மேலும் தெரியவருகையில் -

இந்த சிறுவன் வெள்ளிக்கிழமை வாந்தி போன்ற உடல் உபாதைக்குள்ளான நிலையில் அச்சுவேலி வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளான்.

அதன் பின்னர் சனிக்கிழமை அதிகாலை 4 மணியளவில் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டபோதே இடைநடுவில் உயிரிழந்துள்ளான்.

சிறுவனுக்கு குடல் அலர்ஜி ஏற்பட்டதாலேயே இந்த மரணம் நேர்ந்துள்ளதாக பிரேத பரிசோதனையின் ஊடாகத் தெரியவந்துள்ளது.

இது தொடர்பான மரண விசாரணைகளில் திடீர் மரண விசாரணை அதிகாரி ஆ.ஜெயபாலசிங்கம் ஈடுபட்டதை தொடர்ந்து, உடற்கூற்று பரிசோதனைகளின் பின்னர் சிறுவனின் உடல் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டது. (05)

# கோப்பாயில் மோ.சைக்கிள் எரிந்த நிலைமையில் மீட்பு

யாழ்ப்பாணம் - கோப்பாய் இராச பாதையில் மோட்டார் சைக்கிளொன்று சனிக்கிழமை இரவு 11 மணியளவில் எரிந்த நிலையில் மீட்கப்பட்டுள்ளது.

சம்பவ இடத்திலிருந்து சுமார் 20 மீற்றர் தொலைவில் மோட்டார் சைக்கிளின் இலக்கத் தகடு மற்றும் கோடரி கண்டெடுக்கப்பட்டுள்ளது.

மோட்டார் சைக்கிளின் உரிமையாளர் பற்றிய விவரம் இதுவரை அறியப்படவில்லை.

இது தொடர்பாக கோப்பாய் பொலிஸார் மேலதிக விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர். (05)

# இங்கிலாந்தில் கட்டாய இராணுவ சேவை....



மேற்பட்ட அனைத்து ஆண்களுக்கும் கட்டாயமாகும். அவர்கள் 6 முதல் 15 மாதங்கள் வரை ராணுவத்தில் பணியாற்ற வேண்டும்.

துருக்கியின் நீண்ட கால முரண்பாடு கொண்ட கிரிஸில், 19 வயதுக்கு உட்பட்டவர்களுக்கு 9 மாதங்கள் ராணுவப் பணி கட்டாயம்.

இதனைப் போலவே ஈரானில் 18 வயதுக்கு மேற்பட்ட ஆண்கள் 24 மாதங்கள் ராணுவத்தில் பணியாற்ற வேண்டும் என்பது கட்டாய சட்டமாகும்.

**இஸ்ரேலில் கட்டாய ராணுவ பணி:**

பாலஸ்தீன மண்ணில் உருவாகிய இஸ்ரேல் நாட்டிலும் ராணுவத்தில் சேவை செய்வது ஆண்களுக்கும் பெண்களுக்கும் கட்டாயமாகும். இஸ்ரேலிய பாதுகாப்புப் படையில் ஆண்கள் மூன்று ஆண்டுகளும் பெண்கள் சுமார் இரண்டு ஆண்டுகளும் பணியாற்றுவது கட்டாயம்.

உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் உள்ள இஸ்ரேலிய குடிமக்களுக்கும் இச்சட்டம் பொருந்தும்.

அமெரிக்காவின் கண்களில் விரலை விட்டு துருத்திக் கொண்டிருக்கும் கியூபாவில், 17 முதல் 28 வயதுடைய ஆண்கள் இரண்டு ஆண்டுகள் கட்டாய ராணுவ சேவையில் பணியாற்ற வேண்டும் என்பது அரசின் உத்தரவு.

ஐரோப்பிய மண்ணில் சமாதான காலத்திலும் சுவிட்சர்லாந்தில் 18 வயது முதல் 34 வயது வரையுள்ள ஆண்களுக்கு ராணுவ சேவை கட்டாயமாக்கப்பட்டுள்ளது. இந்தச் சட்டத்தை 2013ஆம் ஆண்டு, சுவிட்சர்லாந்து வாக்கெடுப்பின் மூலம் முடிவுக்கு கொண்டு வர முயற்சி செய்யப்பட்டது.

**பிரேசிலில் கட்டாய பணி:**

இலத்தீன் அமெரிக்க நாடான பிரேசிலில் 18 வயதுக்கு மேற்பட்ட ஆண்களுக்கு ராணுவ சேவை கட்டாயம். இந்த கட்டாய ராணுவச் சேவை 10 முதல் 12 மாதங்கள் வரை நீடிக்கும். உடல்நலம் போன்ற காரணங்களுக்காக, ராணுவத்தில் கட்டாயமாக பணியாற்றும் விதியிலிருந்து விலக்கு அளிக்கப்படலாம்.

அரபு நாடுகளில் குறிப்பாக சிரியாவிலும் ஆண்களுக்கு ராணுவ சேவை கட்டாயம். 2011ஆம் ஆண்டு, அந்நாட்டு அதிபர் பஷர் அல்-அசாத் கட்டாய ராணுவ சேவைக்கான கால அளவை 21 மாதங்களில் இருந்து 18 மாதங்களாக குறைக்க முடிவு செய்தார்.

ஆபிரிக்க நாடான எரித்திரியாவிலும் ராணுவத்தில் கட்டாயம் சேவை செய்ய வேண்டும் என்ற சட்டம் உள்ளது. இந்த நாட்டில் ஆண்கள், இளைஞர்கள் மற்றும் திருமணமாகாத பெண்கள் 18 மாதங்கள் நாட்டின் ராணுவத்தில் பணியாற்ற வேண்டும் என்பது கட்டாய சட்டமாகும்.

இப்போது பிரிட்டனிலும் கட்டாய இராணுவ ஆட்சியைக் கொண்டுவரப்போவதாக ரிஷி சுனக் அறிவித்திருப்பது தேர்தலில் அவரது கட்சியின் தோல்விக்கு னாரமூன அமையுமா என்பதே இப்போதுள்ள கேள்வி.

# இரண்டு ஓட்டோக்கள் மோதிக் கோர விபத்து

## ஒருவர் காயம்

கேகாலை ,புலத்கொஹுபிட்டிய பிரதேசத்தில் இரண்டு ஓட்டோக்கள் மோதி இடம்பெற்ற விபத்தில் ஒருவர் காயமடைந்துள்ளார்.

விபத்தின் போது ஓட்டோவில் பயணித்த ஒருவர் காயமடைந்துள்ள நிலையில் கரவனெல்ல வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார். (05)






காலைக்கதிர் Kalaikkathir

# அக்கரைப்பற்றில் இன நல்லிணக்க பொசன் பெரஹராப் பெரு நிகழ்வு










(வி.ரி.சகாதேவராஜா)

அக்கரைப்பற்று நகரை அசத்திய இன நல்லிணக்க பொசன் பெரஹரா பெருநிகழ்வு சனிக்கிழமை இரவு கோலாகலமாக நடைபெற்றது.

அக்கரைப்பற்று ஸ்ரீவிஜயராம விகாரையின் ஏற்பாட்டில் இடம்பெற்ற பொசன் பெரஹரா நிகழ்வு சிங்கள, தமிழ், முஸ்லிம் மக்களின் ஒத்துழைப்புடன் இன நல்லிணக்க நிகழ்வாக நடைபெற்றது .

நிகழ்வில் பிரதம அதிதியாக அம்பாறை மாவட்ட அரசாங்க அதிபர் சிந்தக அபேவிக்ரம கலந்து சிறப்பித்தார். ஆலையடிவேம்பு பிரதேச செயலாளர் இராசரத்தினம் திரவியராஜ் சமூகமளித்திருந்தார். ஏனைய அதிகாரிகளும் பிரசன்னமாகியி ருந்தனர்.

இப் பொசன் பெரஹரா ஆலையடிவேம்பு பிரதேச செயலகத்திற்கு அருகிலிருந்து ஆரம்பமாகி சாகாமம் பிரதான வீதி ஊடாக அக்கரைப்பற்று மாநகரை வந்தடைந்து பின்னர் அக்கரைப்பற்று பொத்துவில் பிரதான வீதி ஊடாக ஸ்ரீவிஜயராம விகாரையை சென்றடைந்தது.

இவ் நிகழ்வில் மாணவர்களின் கலை கலாசார நிகழ்வுகள் இடம்பெற்றன.( 05)

# டெங்கு நோயாளர்களின் எண்ணிக்கை அதிகரிப்பு

நாட்டில் டெங்கு நோயாளர்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளதாக சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது. அதன்படி, நாட்டில் இவ்வருடத்தின் இதுவரையான காலப்பகுதிக்குள் 27,197 டெங்கு நோயாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளதுடன் 9 டெங்கு மரணங்கள் பதிவாகியுள்ளன.

அதிகளவான டெங்கு நோயாளர்கள் மேல் மாகாணத்திலிருந்து பதிவாகுவதாகச் சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

நாட்டில் நிலவும் சீரற்ற காலநிலை காரணமாக டெங்கு நோய் பரவக்கூடிய அபாயம் காணப்படுவதால் பொதுமக்கள் அனைவரும் தங்களது சுற்றுச்சூழலைச் சுத்தமாக வைத்திருக்குமாறு சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது. (05)

# 'நானே ஆரம்பம் வெல்வோம் ஸ்ரீ லங்கா' திட்டத்தில் அம்பாறையில் சிமார்ட் போர்ட்




(சர்ஜூன் லாபீர்)

தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சின் அனுசரணையில் அம்பாறை மாவட்டத்தில் உள்ள ஒவ்வொரு பிரதேச செயலக பிரிவிலும் தெரிவு செய்யப்பட்ட ஒரு பாடசாலைக்கு ஸ்மார்ட் வேர்ட் கையளிக்கும் நிகழ்வு சனிக்கிழமை தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சர் மனுஷ நாணயக்கார தலைமையில் அம்பாறை வீரசிங்க விளையாட்டு மைதானத்தில் நடைபெற்றது.

இந் நிகழ்வில் சம்மாந்துறை பிரதேச செயலக பிரிவில் தெரிவு செய்யப்பட்ட கமு/ஃசது/ஃ அல் அர்ஷத் மகா வித்தியாலயத்திற்கு தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு இராஜாங்க அமைச்சர் ஜகத் புஷ்பகுமாரவால் சம்மாந்துறை பிரதேச செயலாளர் எஸ். எல் முஹம்மது ஹனீபாவிடம் ஸ்மார்ட் வோர்ட் கையளிப்பு செய்யப்பட்டது.

இந் நிகழ்வில் சம்மாந்துறை அல் அர்ஷத் மகா வித்தியாலய அதிபர் எஸ். அப்துல் ரஹீம்,முன்னாள் அமைச்சர் தயா கமகே உட்பட அமைச்சின் உயர் அதிகாரிகள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (05)

# அகில இலங்கை சமாதான நீதிவானாகப் பதவியேற்பு



அம்பாறை மாவட்டம் பாலமுனையைச் சேர்ந்த சமூக செயற்பாட்டாளரான நஜாத் முஹம்மட் அப்துல் நஹீம் அவர்கள் கடந்த 13 ஆம் திகதி கல்முனை மாவட்ட மேலதிக நீதிபதி எம். எஸ்.எம். சம்சுதீன் முன்னிலையில் தீவு முழுவதற்குமான (அகில இலங்கை) சமாதான நீதிவானாக சத்தியப் பிரமாணம் செய்து கொண்டார்.

இவர் கலைப்பட்டதாரியும், கிழக்கு மாகாண வீடமைப்பு அதிகார சபையின் முகாமைத்துவ சேவை உத்தியோகத்தருமாவார்.

அத்தோடு மரண உபகர நிதியத்தின் இணைப்பாளரும், டைட்டன்ஸ் விளையாட்டுகழகத்தினுடைய ஆலோசகரும் மற்றும் அல்ஹிதாயா மகளிர் கல்லூரியின் பழைய மாணவ சங்க செயலாளரும் ஆவார்.

பாலமுனை மின்ஹாஜ் மகா வித்தியாலயத்திலும், நிந்தவூர் அல் அஷ்ரப் தேசிய பாடசாலை மற்றும் பாலமுனை அல்ஹிதாயா மகளிர் கல்லூரி ஆகிய பாடசாலைகளின் பழைய மாணவராவார். இவர் பாலமுனை செய்னுலாப்தீன் அப்துல் நஹீம், சுலைமான் சித்தி சாபிறா தம்பதிகளின் மூத்த புதல்வர் என்பது குறிப்பிடத்தக்கதாகும். (05)





# மாவனல்லை பாதிபிய்யா மகா வித்தியாலய ஊடக குழு மாணவர்களுக்குப் பயிற்சி நெறி

(தில்சாத் பர்வீஸ்)

மாவனல்லை, ஹெம்மாதகம, மடுள்போவை பாதுபிய்யா மஹா வித்யாலயத்தின் ஊடகப் பிரிவால் ஏற்பாடு செய்யப்பட்ட ஊடகப் பயிற்சி முகாம் சனிக்கிழமை பாடசாலை விஞ்ஞான ஆய்வு கூடத்தில் அதிபர் ஏ டப்ளியூ இஸட்ஸைனுல் ஹூஸைன் தலைமையில் பாடசாலையின் ஊடகப் பிரிவுப் பொறுப்பாளர் ஆசிரியை எம் ஐ. நஜ்முன்னிஸா கண்காணிப்பில் இடம்பெற்றது.

இதில் மாணவர்களுக்கு செய்தி எழுதுதல், செய்தி வாசித்தல், மேடை அறிவிப்பு, ஊடக நுட்பங்கள் என்பன ஆர் ஜே மீடியா வலையமைப்பின் பணிப்பாளரும் சமூகப்பணி இளம் கலைமாணி மாணவரும் ஊடகத்துறையில் பல தேசிய விருதுகளை பெற்ற வானொலி அறிவிப்பாளர் ஏ எம். இன்ஷாப் விரிவுரை வழங்கியமை குறிப்பிடத்தக்கது.

இந் நிகழ்வில் பாடசாலையின் ஊடகப் பிரிவு மாணவர்கள், பாடசாலை பழைய மாணவர்கள் ,ஆசிரியர்கள் எனப் பலரும் கலந்து சிறப்பித்தனர். (05)




இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 24.06.2024இல் வெளியிடப்பெற்றது.